# தென்மொழி

## ஏமாறிப் போகாதீரே!

தனிநலத்தில் நாட்டமுற்றுத் தமிழினத்தின்
நோக்கமின்றிக் கட்சிகளின் தலைவ ரெல்லாம்
பனிநிலத்தில் மலத்திரளைக் குவிப்பதுபோல்
பசும்பச்சை இழிமொழிகள் பரக்கக் கூறிக்
கனிமரத்தில் வீற்றிருக்கக் கல்லெறிந்து
காயடிக்கும் கயமையினை என்ன சொல்வோம்!
இனிவுரத்த உணர்வுகொள்வீர் இளைஞர்களே!
இத்தகையோர்க் கேமாறிப் போகாதீரே!

மறுத்தொருவர்க் கொருவர்விடும் அறிக்கைகளும்
மனங்கூசும் இழிவுரையும் தமிழர் மாண்பை
அறுத்தெடுக்கும் வகையல்லால்—பகைவரெல்லாம்
அவைகூறி நகைக்கின்ற நிலையேயல்லால்—
நிறுத்தெடுக்கும் விளைவென்ன? கட்சிகளின்
நிலையறிவீர்! நெடுந்தமிழைப் பேணுதற்கே
சிறுத்தையெனப் பாய்ந்தெழுவீர்; இளைஞர்களே
இத்தகையோர்க் கேமாறிப் போகாதீரே!


சுவடி 16
ஓலை: 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
ஓர் உருபா.

# நமக்கு வந்த மடல்கள்.

0:744:

தொன்மொழியைக் காக்கத் துணிந்த மனத்துடனே
'தென்மொழியை ஏற்றபெருஞ் சித்திரனே!—உன்மொழியைப்
பூனையின் காதினிலே போட்டாலும் அப்பூனை
ஆனையைத் தாக்கும் அறைந்து.

ஈர மனமுடைய எல்லாத் தமிழருமே
வீர மனம்பெறவும் வேண்டுமே!—பாரினில்
வல்லானே எப்போதும் வாழ்வான்! தனிவளமை
இல்லானே தாழ்வான் இழிந்து.

ஊற்றுகி வாழ்வின் உயிராகித் தங்கள்வாய்க்
கூற்றுகி வாழுங் குளிர்தமிழே—மாற்றுர்க்குக்
கூற்றுகித் 'தென்மொழி'யின் கொள்கையாய் வாழ்வதனைப்
போற்றுதார் இல்லை புகழ்ந்து.

—**பாவலர். கோகபென்**, மதுரை-2.

**0:745:** யேரன்பிற்குரிய ஐயா, வணக்கம். வாழ்க பல்லாண்டு! "தீபம் பார்த்தசாரதிகள் தெளியட்டும்" என்ற தங்கள் ஆசிரியவுரை, புனைவு போட்டு வீதி உலா வரும் போலித் தமிழர்க்குச் சூடு போட்டது போல் அமைந்திருந்தது. ஆரியப் பார்ப்பனரை விட இன்று தமிழ்ப் பார்ப்பனரே மிகுந்து தனித்தமிழ்க் கொள்கையையும், அதனைப் பின்பற்றுவோரையும் பகடி செய்து வருகிறுர்கள். தமிழனுக்கு அன்று முதல் இன்று வரை புறப் பகையினும் அகப் பகையே சூழ்ந்து நின்று தொல்லை கொடுத்து வருகிறது. இந்நிலையிலும் தென்மொழி ஒன்று மட்டுந்தான் தன் செம்மாந்த போக்கால் நிமிர்ந்து நின்று, யாருக்கும் அஞ்சாமல் துணிவோடு தமிழைக் காத்து வருகிறது. ஆனுல் தென்மொழிக்குத் துணை நிற்கும் தூயவர்களின் பட்டியல் குறைவாகத்தான் உள்ளது. என் செய்வது? இனறில்லாவிடினும் என்றேனும் ஒரு நாள் காலம் இதற்கு விடையிறுத்தே தீரவேண்டும். அதுவரை நாம் அமைதியாக இருந்து வினைபடுவோம். தென்மொழியில் "மகளிர் பகுதி" ஒன்று தொடங்கி நல்லுணர்வு கொளுத்த முயலுங்கள். இன்றைய அரசியல் ஆரவாரத்—திரைப்படப் போலிப் புற நாகரிக மாயையில் வீழ்ந்து கிடக்கும மகளிர் திருந்திட, தெளிந்திட தென்மொழி வழிகோலுமாக! வெல்க தென்மொழி. —**சிவ. தாமரை**, மணப்பாறை.

**0:746:** ஐயா, தினமணிக் கதிர் ஆசிரியர் துக்ளக்கில் எழுதியதை நானும் படித்தேன். அன்றே உங்களைப் பற்றித்தான் நினைவு வந்தது. உடனுக்குடன் நீண்ட ஆசிரியவுரை மூலம் தமிழின் பெருமையையும், வடமொழியின் (சமசுக்கிருதத்தின்) சிறுமையையும் அழகாக விளக்கம் காட்டியுள்ளீர். நன்றி.

—**வா. இரா. சண்முகம்**, வழக்கறிஞர், திருப்பத்தூர் வ. ஆ.

(அட்டைப்படம் 3-ஆம் பக்கம் பார்க்க)

இம் மாதச் சிறப்பு மடல் :

# துள்ளி வருகுது வேல்!

*0:743:* பேரறமுருற்றும் பெருந்தாளாண்மையும், ஆரிடருழந்துங் கைதுாவா வினைமாட்சியுமார்ந்த தனிப்பெருந் தமிழ் வேங்கையே,

இன்றமிழ் வணக்கம்; வாழ்க. தொன்றுதொட்டுத் தமிழரிடை வதிந்து, தமிழரிடமிருந்தே ஊணுடையுறையுள் பெற்றுத் தமிழையே தாய்மொழியாகவும், வாழ்மொழியாகவுங் கொண்டு, தமிழராலேயே முன்னேறி, தமிழர் துணையாலேயே வாழ்ந்துவரும் தன்னலமிக்க 'தீபம்' நா. பார்த்தசாரதி போலும் ஆரியப்பார்ப்பனர், புலமில் கல்வியும், நலமில் புகழும், வழுவிய வொழுக்கமும் ஒருவழி யமைந்து பெருகிய செருக்கில் செந்தமிழையுந் தமிழறிஞரையுந் தாழ்த்தும் நோக்கில் எழுதியும், பேசியுங் வருதல் அஞ்சத்தக்க தீக்குறியாம் என்பதனைத் தங்களின் அரிய ஆழமிக்க ஆசிரியவுரையால் அனைவருக்குந் தெரியவைத்தீர்கள். தன்னலம் பேணித் தமிழ் நலம் பேணு எழுத்தாளராகிய 'தீபம்' நா. பார்த்தசாரதி, 'துக்ளக்' சோ; 'கலைமகள்' கி. வா. ச முதலானோர் தான் எனுந் தற்செருக்குத் தலைக்கேறிப் பொருளீட்டுதலையே குறிக்கொண்டு, மனம் போன போக்கிலெல்லாந் தமிழுக்கு மாருகத் தத்தம் தரமிலாப் புறம்போக் கிதழ்களில் எழுதி வருதல் ஆரியப் பார்ப்பனர்தம் அளவிறந்த கொட்டங்கள் இன்னும் அடங்கிற்றில வென்பதையே காட்டும்.

இனம் போன்று இனமல்லா இனைய, இடக் கேடர்கள் தரும் சரக்குகளைக் கண்டு, நரகலை நாடி வந்து மொய்க்கும் ஈக் கூட்டம் போல், நம்மனோர் தேடிச் சென்று தாங்கிப் படித்தலை யறியுங்கால் உள்ளந் துடிக்கின்றது. அறிதோரறியாமை வயப்பட்டுத் தம் அருமை பெருமையுணராது ஆரிய் அடிமை மடித்துயரிலாழ்ந்து கிடக்கும் அடிவருடித் தமிழர்கள், அவ்விழிந்த பார்ப்பனர் நெறி யிலேயே பொருளீட்டுதலையே வாழ்க்கைப் பயனுறு நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வருதல் பெரிதும் இரங்கத்தக்கது. பொருளீட்டு தல் ஒருவரின் தனியுரிமை வெனினுந் தண்ணூர் தமிழ் கெடுத்துப் பொருளீட்டல் உரிமையன்று. இழிந்த பார்ப்பன இதழாசிரியர்களும், அவர்தம் அணுக்கத் தொண்டரடிப்பொடிகளும் எத்தகைக் கட்புல வுண்மையையும் மறுக்க அஞ்சார். அமிழ்தும், நஞ்சும் ஒரே இடத் தில் உள்ளதுபோல், 'தமிழே வாழ்க்கை'யெனத் தாழாதுஞற்றுந் தாங்களும், மொழிமாமலை பாவாணரும், வேண்டுமென்றே தமிழைத் தாழ்த்தும் தன்னலப் பிண்டங்களாகிய பார்த்தசாரதி போன்றவர் களும் இத்தமிழ் மண்ணிலேயே வாழ்தல் இறும்பூதெய்தற்குரியது என்ருலுந் தென்மொழியும், அதில் தாங்கள் எழுதுந் திறஞ்செறிந்த ஆசிரியவுரைகளும் ஆரியப் பார்ப்பனர்க்கும், அடிப்பொடிகளுக்கும் அரிமாக்கனவே என்பதில் ஐயமில்லை. இதுகாறுந் தங்களது ஆசிரியவுரைக் கருத்துகளை மறுத்துரைக்குந் துணிவு, அறிவாற்றல், அஞ்சாமை யாருக்குமில்லை. தென்மொழி, தென்றமிழ் நாட்டார்க்கு

உயிரூட்டும் பேருணவு. தீபம், கலைமகள், கதிர் முதலாய இதழ்கள் தேவையேற்படின் பயன்படுத்தக் கூடிய ஊறுகாய் போல்வன. ஊறுகாய் என்றும் உணவாவதில்லை. எனினும், ஊறுகாய் உணவாக முயல்வதை உணர்வுடைய என்னையர் ஒருபோதும் ஒப்பார். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவாவது தென்மொழி ஒன்றே; நன்றே அறிமின்.

தென்மொழிப் பட்டறையிலே தமிழர்களின் மழுங்கிய முனைகள் தீட்டப்பட்டு வருகின்றன. புதிய வேல்கள் வடிக்கப்படுகின்றன. கலப்புத் தமிழ் இதழ்கள் புறக்கணிப்புப்போருக்கும், குழுகாயப் புரட்சிக்கும் பயிற்சியளிக்கப் பெறுகின்றது. குறிப்பிட்ட தொகையினர்க்குத் தென்மொழிப் பட்டறையிலே வடிக்கப் பெற்ற கூர்வேல் வருதல் கண்டால் குலை நடுங்கும். அதற்கு முன்பே, அறிவோடு செந்தமிழ் நெறியிலே செல்பவர் செல்க. தென்மொழிச் செலவில் ஒரு பெருங்குறிக்கோளை எய்த உடன்வருவோர் வருக. இன்றேல் எதிர்வருங்காலத்தே எறியப்படுங் கூர்வேல்கள் குறி தப்பாமற் பாயும். பகை மாயும். துள்ளி வருகுது வேல்; எதிர்ப்படுந் தடைகள் தூள்; தூள். அன்பிலே, தென்மொழித்தம்பி,

—**பெரு. தமிழ்வேந்தன்,** பவானிசாகர்.

---

வெளிவந்து விட்டது! விற்பனைக்குக் கிடைக்கிறது !

## பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

**அரிய பாடற்களஞ்சியம்**

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி. தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ 1800 வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு! செந்தமிழ்த் தேனூறு!

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய
இலக்கியப் பாச்சுரங்கம்!

| | | |
|---|---|---|
| **முதல் தொகுதி** | **உரு.** | **15—00** |
| **2-ஆம் தொகுதி** | ,, | **11—00** |
| **3 ,, தொகுதி** | ,, | **17—00** |

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில் விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு
தென்மொழி, சென்னை-5.

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!



சுவடி: 16 ஓலை: 7
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
கும்பம். தி. பி. உ01க0-
பிப்-மார்ச்சு-1980.

# தென்மொழி

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலிங்கனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்]
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.,

## தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் நிறைவு தருவதாயில்லை



கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின் இந்தியாவில் பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே. மக்களிடத்தில் பெரும் அமைதியின்மைக்கு இங்கு அடிக்கடி மாறுதலுறும் அரசியல் நிலைகளும் ஒரு பெருங் கரணியமாகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்திய அரசியல் மாற்றத்தால் இங்குள்ள மக்கள் பெரிதும் அலைக்கழிக்கப் பெற்றுப் பலவகை இன்னல்களுக்குள்ளாக்கப்படுவது பெரிதும் வருந்தத் தகுந்தது. எவருடைய கை ஓங்கக் கூடாது என்று எல்லாராலும் பேசப் பெற்றதோ, அவருடைய கையே நடுவணரசில் நெடிதோங்கி நிற்கும் வாய்ப்புப் பெற்றுவிட்டது, நம் நாட்டு அரசியல் அமைப்புக்கே விடப்பெற்ற ஒரு பெரும் சூளுரையாகும். நடுவணரசின் மாற்றம் அனைத்து மாநிலங்களையுமே தாக்குவதுபோல் தமிழகத்தையும் தாக்கத்தான் செய்தது. ஆனால் பிற மாநிலங்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்கும் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்கும் ஒரு பெரிய வேறு

பாடு உண்டு. அதுதான் திரவிட இனநலத்தையே ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஆரிய இனத்திற்கு அடிமைப்படுத்துவ தாகும்.

நம்மைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற ஒப்போலைகளை வைத்துக்கொண்டு, அல்லது அதன் அடிப்படையில் மாநில அரசுகளை மாற்றுவது, அஃது எவர் சார்பில் எவர் செய்வ தாக இருந்தாலும் அஃது ஓர் அரசியல் குற்றமே (Political Crime) ஆகும். அஃது ஒரு நலமிக்க அரசியலும் (Sound Politics) ஆகாது. எனவே நடந்து முடிந்த பாராளுமன்ற முடிவுகளை வைத்துக் கொண்டு மாநில அரசுகளைக் கவிழ்த்தது, இந்நாட்டின் குடியர சமைப்பினை, வல்லாண்மை அனைத்ததிகார அமைப்புக்கே படை நடத்திச் செல்வதாகும். ஒரு குற்றத்திற்குத் துணை போவதும் ஒரு குற்றமான செயலே. ஒரு கொலையாளியையே ஒருவன் கொலை செய்வதானாலும் அஃது எப்படிக் குற்றமோ, அதுபோல் சென்ற முறை தி. மு. க. அரசை இந்திரா காந்தி கவிழ்த்தபொழுது, அதனை இருகை நீட்டி வரவேற்றது அ. தி மு. க.வாக இருந்தாலும், அந்த அ. தி. மு. க. அரசுக் கட்டிலில் ஏறி மக்களளித்த முழுமைக்கால ஆட்சிக்கிடையில் அதனை இறக்கிவிட்டது நல்ல ஆளுமை ஆகாது. அதனைத் தி. மு. க. வரவேற்றிருக்கவும் கூடாது. இனி, தேசியம் பேசும் சனதா உள்ளிட்ட பிற அனைத்திந்திய கட்சிகள் கூட அதனைக் கண்டித்திருக்கும் பொழுது தி. மு. க. கண்டிக்காததும், மாறாக அதன் வீழ்ச்சியால் மகிழ்ச்சி அடைவதும் கலைஞரின் அரசியல் தந்திரத்திற்குப் பெருமை தருவதாயில்லை. இதைக் கலைஞர் நன்கு ஆழ்ந்து நடுநிலையுடன் எண்ணிப்பார்க்க வேண்டும் சென்ற ஆண்டு வரை, அ. தி. மு. க. தனக்குற்ற முழுமையான ஆட்சிக் காலம் வரை கட்டாயம் ஆட்சி நடத்தியே தீரவேண்டும். அதற்கும் அதை ஆட்சியினின்று இறக்குவதோ அதுவாகவே இறங்குவதோ வரவேற்கக் கூடியதன்று; ஏனெனில் அதன் முழுமையான ஆட்சிக் கால நடவடிக்கைகளையும் மக்கள் நன்கு கவனித்து அவர்களாகவே அதனை வெறுத்தொதுக்கும் சூழ்நிலைக்கு நாம் இடமளிக்கவேண்டும் என்று பேசி வந்த கலைஞர், இறுதியில் இந்திரா காந்தியுடன் கூட்டுச் சேர்ந்ததுமின்றி அ. தி. மு.க.வை அரசுக் கட்டிலினின்றும் இறக்கி விடவும் துணை நின்றார் என்பது மகிழத்தக்க மனமாற்றம் என்று ஒப்புக்கொள்ள இயலாது. மக்கள் ஐந்தாண்டுக்கால ஆட் சிக்கு இசைவளித்தது மாநிலச் சட்டமன்றத்தைப் பொறுத்த அளவிலே தவிர, பாராளுமன்ற மாற்றத்தைப் பொறுத்ததாகக் கருதுவது அரசியல் அமைப்புக்கே முரண்பட்டதாகும். வேண்டு மானால் மக்கள் நடுவணரசில் இந்திராவும் மாநில அரசில் அ. தி. மு. க.வும் இருக்கலாம் என்று கருதியிருக்கலாமன்றோ. அதை அப்படித்தான் பொருள் கொண்டிருக்க வேண்டும். இனி, ஒவ்வொரு பாராளுமன்ற மாற்றமும் மாநில அரசை மாற்றும்

அதிகாரமுடையது என்று கொண்டால் அது குடியரசமைப்பையே மூளியாக்கி விடுவதாகும்.

இனி தமிழக அரசைப் பொறுத்த வரையில் நமக்குத் தி. மு. க.வும் ஒன்றுதான்; அ. தி மு. க.வும் ஒன்றுதான். இரண்டு ஒரே அரசியல் இன அடிமரத்தின் இரண்டு கிளைகள் அவை. கலைஞர் கருணாநிதி, ம. கோ. இராமச்சந்திரனை விட அரசியல் திறமும் கலைத்திறமும் ஆளுமைத் திறமும் வாய்ந்தவர் என்பதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் அம் மூன்று திறன்களும் தமிழர் நல—திரவிட இன மரபு வளர்ச்சிகளையே நோக்கமாகக் கொண்டன என்பதிலும், அவற்றுக்காகத்தான் நாம் அவர் திறப்பாடுகளையும் கூட வரவேற்கிறோம், இன்னும் மகிழ்கின்றோம் என்பதிலும் கட்சிக் கண்ணோட்டத்தோடன்றி, மொழி, இனநலக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் எவருக்கும் எவ்வகைக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. அந்த நிலைக்கு நாம் வந்தால்தான் நாம்--தமிழர்களாகிய நாம், கடந்த கால வரலாற்றுச் சரிவை ஓரளவு சரி செய்து கொள்ள முடியும். இல்லையானால் நாமும் ஆரிய தேசிய நீரோட்டத்தில் கலந்து ஒன்றுமில்லாமல் போய்விட வேண்டியதுதான்.

ம. கோ. இராமச்சந்திரன் தனிப்பட்ட முறையில் கலைஞர்க்கு வேண்டாதவராக இருக்கலாம். அல்லது கலைஞர் தனிப்பட்ட முறையில் இராமச்சந்திரனுக்கு விரும்பத் தகாதவராக இருக்கலாம். ஆனால் இருவரும் இரண்டு வேறு காலக்கட்டங்களில் இந்திரா காந்திக்கு வேண்டாதவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அதே போல், இனி எதிர்காலத்தில் இருவருமே இந்திரா காந்திக்கு வேண்டாதவர்களாகப் போவதை நாம் பார்க்கத்தான் போகிறோம். ஒருவர் நெருங்கும் பொழுது ஒருவர் விலகி விடுகிற நிலைமை அரசியலைப் பொறுத்த வரையில் எவ்வகைத் திறனாய்வுக்கும் உள்ளாகிப் போகட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் வருங்காலத்தில் ஒருவர் கையைக் கொண்டே ஒருவர் கண்களைக் குத்த வைக்கின்ற அரசியல் சாணக்கியம் தலைதூக்கும் பொழுது, இவர்கள் இருவரும் யார் முகத்தை யார் பார்க்கப் போகிறார்கள் என்பதுதான் நம் கேள்வி. அரசியல் புயல் வீச்சில் அப்படியொரு சூழ்நிலை வந்தால் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் ஒழிக்க நேரம் பார்ப்பார்களானால், அதே அரசியல் வழி, இவர்கள் இருவரையும் ஒழித்துக் கட்ட இந்திரா காந்திக்கு வெகு நேரம் ஆகாது என்பதை இவர்கள் இருவரும் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மேல் இப்பொழுது இவர்களுக்கு நாம் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் இவர்கள் இருவரும் பதவி வெறிபிடித்த மனங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். மக்கள் தொண்டு என்பது அரசியல் பதவி வழியாகத்தான் செய்ய முடியும்

என்று நம்புகிறார்கள். ஒருவாறு அவ்வாறு நம்புவதைக் கூட நாம் பிழை என்று சொல்லவில்லை. ஏனெனில் இனத்தை முன்னேற்ற அரசியல் பதவியிலும் ஓரிருவர் இருந்துதான் ஆகவேண்டும். அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர ஒருவர் முதுகை ஒருவர் பதம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இவ்வகையில் இவ்வினத்திற்கு நேர்ந்த இழப்புகளும் சரிவுகளும் நம் இன வரலாற்றில் பற்பல. அவற்றுள் ஒன்றை மட்டும் நினைவூட்டி இவ்வுரையை முடிப்போம்.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மதுரையை மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்றொருவன் ஆண்டான். அவனுக்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்று இரண்டு மக்கள். முதலாமவன் பட்டத்தரசி வழியாகப் பிறந்தவன்; அகவையில் மூத்தவன். இரண்டாமவன் அரசனின் காமக்கிழத்திக்குப் பிறந்தவன்; இளையவன். இருப்பினும் குலசேகர பாண்டியனே பட்டத்தரசியின் மகனும் மூத்தவனுமான சுந்தரபாண்டியனை விட்டுவிட்டுக் காமக் கிழத்தியின் மகனும் இளையவனுமாகிய வீரபாண்டியனுக்கே முடிசூட்டினான். எனவே சுந்தரபாண்டியன் சினத்தால் தன் தந்தையைக் கொன்றான். அது மட்டுமன்றி அக்கால் தில்லியரசன் அலாவு--தீன் கில்சியின் படைத் தளபதியாகிய மாலிகாபூருக்குக் கமுக்கமாகச் செய்தியனுப்பித் தன் தம்பி வீரபாண்டியனை ஒழித்துக்கட்ட வேண்டினான். மாலிக்காபூர் வந்தான். வழியிலுள்ள கோயில் குளங்களைக் கொள்ளையடித்தான். நாடு நகரங்களைச் சிதைத்தான். வீரபாண்டியனையும் நாட்டை விட்டுத் துரத்தினான். பின்னர் சுந்தர பாண்டியன் ஆண்ட மதுரையையும் சூறையாடி அவனையும் அரசிழக்கச் செய்தான். மாலிகாபூர் வரவால் அவனுக்கு ஊதியம். பாண்டியர்களுக்கோ வீழ்ச்சி. ஏனோ தெரியவில்லை தமிழினம் தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டது; கொள்கிறது; கொள்ளும் போல் தெரிகிறது. — **பெருஞ்சித்திரனார்.**

---


## ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தென்மொழியில் எழுதி வந்த 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' எனும் தொடர்கட்டுரை நூல் வடிவில், கோவைத் **'தென்மொழி இயவ** வெளியீடாக வெளிவந்து விட்டது. அன்பர்கள் வாங்கிப் பயன் பெறுக,

**விலை உரு : 2-00** *(அஞ்சல் செலவு தனி)*

நூல் கிடைக்குமிடம் :

1. தென்மொழி சென்னை-5.
2. **அரங்க—தமிழ்மணி**, தென்மொழி இயவம், 45, காமராசர் சாலை, கோவை-15. மற்றும் கோவையில் தென்மொழி கிடைக்கும் கடைகளிலும் கிடைக்கும்.

*சிறப்புச் செய்தி :*

## சிங்கப்பூர் தமிழ்முரசு ஆசிரியர்
## திரு, மெ. சிதம்பரனார் தமிழகம் வந்துள்ளார்!

சிங்கப்பூர் **தமிழ் முரசு** ஆசிரியரும், சிறந்த தூய தமிழ்த் தொண்டரும் ஆகிய **தனித்தமிழ்ச் செம்மல்** திரு. **மெ. சிதம்பரனார்** அவர்கள் கடந்த 6-2-80-இல் வானூர்தி வழியாகத் தமிழகம் வந்துள்ளார்கள். அன்று சென்னை, வானூர்தி நிலையத்தில், அவரைத் தென்மொழி ஆசிரியர் **மா. பூங்குன்றன்**, க. மு; அறி. இ, **மா. பொழிலன்**, க. இ., தென்மொழி **ப. முருகவேள்** ஆகியோர் மாலை யணிவித்து வரவேற்றுத் தென்மொழியகத்திற்கு அழைத்து வந்து, விருந்து புரந்து, மறுநாள் அவர்களின் ஊராகிய காரைக்குடி' கல்லுப்பட்டிக்கு வழியனுப்பி வைத்தனர். (அக்கால் பொறுப்பாசிரியர் அவர்கள் தொடர் சொற்பொழிவுகளின் பொருட்டாக வெளியூர் சென்றிருந்தார்கள்.)



உயர்திரு. மெ. சிதம்பரனார் அவர்கள் தமிழகம், காரைக்குடியை அடுத்த கல்லுப்பட்டியில் 1924-இல் பிறந்தவர்கள். புலவர் மீ. கந்தசாமியார், புலவர், மாணிக்கவாசகம், புலவர். பாலசுப்பிரமணியனார் ஆகியோர் பால் மாணவராக விருந்து தமிழ் மொழியைத் தனியே பயின்றவர்கள். 1941-இல் இவர் மலேசியா சென்றார். சில நாட்கள் அங்குள்ள வட்டிக்கடை ஒன்றில் கணக்கராகப் பணியாற்றினார். அதன் பின் சிங்கப்பூர் இராமகிருட்டிண மடத்தினர் நடத்திய தேசியப் பள்ளியில் ஆசிரியரானார். அக்கால் இராபின்சு கல்லூரி ஆசிரியர்களால் நடத்தப் பெற்ற ஆசிரியர் பயிற்சி வகுப்பில் ஆங்கில வழி ஆசிரியர் பயிற்சி பெற்றார். எனவே ஆங்கிலத்திலும் சிறந்த புலமை எய்தினார்.

பின்னர் **'மலேயா நண்பன்'** என்னும் நாளேட்டில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1947-இல் தமிழவேள் திரு. **கோ. சாரங்கபாணி** அவர்களின் அழைப்பிற்கிணங்கி, சிங்கப்பூர் **தமிழ் முரசு** நாளிதழில் சிலகாலம் பணியாற்றி, இடையில் நின்று, **'மலைநாடு'**, **'தமிழ் மலர்'** ஆகிய நாளேடுகளில் பணி செய்தார். பிறகு, மீண்டும் தமிழ் முரசிலேயே சேர்ந்து இன்று வரை அங்கேயே தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

திரு. **மெ. சிதம்பரனார்** அவர்கள் தூய தனித்தமிழ்ப் பற்றாளர். தமிழில் சிறந்த இலக்கண, இலக்கியத் தேர்ச்சியுடையவர். நல்ல ஆங்கிலப் பயிற்சி மிக்க இவர் மொழி பெயர்ப்புத்துறையில் தனித்தமிழ் ஈடுபாட்டோடு, தன்னிகரற்றோராகவும் விளங்குபவர். இளமையிலிருந்தே, **பாவாணர்**பால் பெருமதிப்பும் அவர்தம் நூல்

களில் பெருவிழைவும் கொண்டவர். தென்மொழிப் பொறுப்பாசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்கள் 1974-இல் சிங்கை சென்றிருந்த பொழுது, அவர்களை வரவேற்றும் அன்பு பாராட்டியும், விருந்து புரந்தும், பல நிகழ்ச்சிகளில் அவரொடு கலந்தும் மகிழ்ந்துதவிய பேரன்பினர் அவர்.

1968-இல் சென்னையில் நடைபெற்ற 2-ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் சிங்கப்பூர் பேராளர்களில் ஒருவராகக் கலந்து கொண்டார். 1977-இல் சிங்கப்பூர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை நடத்திய 'சிங்கப்பூரில் தமிழும் தமிழ் இலக்கியமும்' என்னும் ஆய்வரங்கு மாநாட்டில் **'தனித்தமிழ் இயக்கத்தின் நோக்கமும் பயனும்'** என்னும் அரிய கட்டுரையினை அளித்துள்ளார். தமிழ் முரசில் தனித்தமிழில் தொடர்ந்து செய்திகள், கட்டுரைகள், பாக்கள், மதிப்புரைகள் ஆகியவற்றை எழுதித் தமிழுக்கு அரிய தொண்டாற்றி வருகிறார். கடந்த 20-1-80 அன்று நடந்த சிங்கப்பூர் தமிழர் சங்கப் பொங்கல் விழாவில் பாராட்டப் பெற்ற அறிஞர்களுள் இவரும் ஒருவர். 1948-இல் தமிழகத்தில் கண்டனூர் திரு. அரங்கநாதரின் திருமகள் **உமையாள் ஆச்சியாரைத்** திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு ஆண் மக்கள் உள்ளனர். திரு. சிதம்பரனர் அவர்கள் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவர்.

தனித்தமிழ்ச் செம்மலும் பேரறிஞரும் மிகச் சிறந்த தனித்தமிழ்த் தொண்டருமாகிய தமிழ் முரசு மெ. **சிதம்பரனர்** அவர்கள் மேலும் பல்லாண்டுகள் அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றிப் பெயரும் புகழும் பெற்றுப் பெருநலனும் பெரு வளமும் வாய்ந்து இனிது வாழ்க வெனத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

---


**புலவர், மறை - திருநாவுக்கரசு**

அவர்கள் எழுதிய

# மறைமலையடிகள் வரலாறு

0 **900 பக்கங்களுக்கு மேல் கொண்டிலங்கும் இந்நூல் மிகச் சிறந்த ஒரு வரலாற்று நூலாகும்.**

0 **தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள விரும்பும் தமிழன்பர்கள் தவறாமல் படிக்க வேண்டிய உணர்வு வடிவாக சுவைமிகு எழுதப்பெற்ற அரிய நூல்.**

0 **அரிய பல செய்திகள், நிகழ்ச்சிகள், அறிஞர்கள் பலரின் துணை வரலாறுகள் முதலியன செறிந்த விரிவான நூல்.**

**விலை உருபா : 25—00 அஞ்சல் செலவு தனி.**

கிடைக்குமிடம் :

**மறை. திருநாவுக்கரசு,**

43, சவகர் நகர், அகரம், பிரம்பூர், சென்னை-82.

# செய்திகள்

**1. தந்தை பெரியார் தமிழ்ப்பெரு மன்றம்—கடலூர்-1.**

தென்னுர்க்காடு மா. வ. கடலூர், தந்தை பெரியார் தமிழ்ப்பெரு மன்றச் சிறப்புக் கூட்டம், சென்ற 6-2-80 மாலை 7 மணியளவில், கடலூர் மாவட்ட நடுவண் நூலகத் திடலில் புதுவை, புள்ளியியல் துணை இயக்குநர் திரு. **நாகப்பன்**, க. மு. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரா. **முத்து குணசேகரன்** க. மு. அனைவரையும் வரவேற்றார். திருவாளர்கள் கதிர். முத்தையன், தமிழ்மன்னன், அரிமாவளவன், மு. முத்துக்கண்ணு வணி. இ., த. இராசா, தென்மொழி க. தமிழமல்லன் க. இ. ஆகியோர் உரைக்குப் பின், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** பெரியார் இனத்தொண்டு பற்றிச் சிறப்புப் பேருரை நிகழ்த்தினார். இறுதியில் திரு. வ. தங்கத்தமிழன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இரவு 11 மணியளவில் இனிதே முடிவுற்றது.

**2 வெற்றிவேந்தன்—மகா இலக்குமி வாழ்க!**

நெடுநாளையத் தென்மொழி அன்பர், புதுவை, கரைமேடு செல்வன் **வெற்றி வேந்த**னுக்கும், செல்வி **மகா இலக்குமி**க்கும் கடந்த சுறவம் 24 (7-2-80) அன்று காலை, கரைமேட்டில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமையில் தமிழ்த் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, திருக்குறள் பெருமாள் முதலியோர் பேசினர். இனிய விருந்துக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. மணமக்கள் நீடுழி வாழ்ந்து மொழி, இன, நாட்டுத் தொண்டாற்றத் தென்மொழி வாழ்த்துகிறது.

**3. நற்றமிழ்ப் பேரவை—திருவெறும்பூர் ஊரகம்—திருச்சி-14 :**

சென்ற சுறவம் 25 (8-2-80) வெள்ளி மாலை 7 மணியளவில், திருச்சி, திருவெறும்பூர், மிகுமின் தொழிற்சாலை ஊரக மன்றத்தில் (Town Holl), நற்றமிழ்ப் பேரவையின் முதல் சிறப்புக் கூட்டம் திரு. **அரசிறைவன்**, அறி. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் அரிய முன்னுரைக்குப் பின் **நாரா. மகிழ்நன்** வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் **செயராமன், கோ. இராமச்சந்திரன்**, தமிழாசிரியை **வசந்தகுமாரி** ஆகியோர் பேரவை நோக்கங்களை விரிவாக எடுத்துரைத்தனர். பின்னர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'தமிழில் நிகரமையும் பொதுவுடைமையும்' என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றினார். ஏற்கனவே ஊரகத்தில் பல தமிழ் மன்றங்கள் இருந்தும் அவை இடை நாட்களில் செயல்குன்றியிருப்பதால் பேரவை தோற்றுவிக்கப்

பட்டதென்றும், இப்பேரவை குல, மத, கட்சிச் சார்பின்றித் தூய தமிழ் முன்னேற்றத்தையும், தமிழ் இன நலத்தையும் கட்டிக் காப்ப தற்கென்றே தோற்றுவிக்கப் பெற்றதென்றும் பேரவை அமைப் பாளர்களான திரு. **நாரா. மகிழ்நன்** அவர்களும், திரு. **குழந்தை ஈகவரசன்** அவர்களும், பிற அன்பர்களும் தனியாகப் பேரவையின் நோக்கங்களை விளக்கிக் கூறினர். அவர்கள் தெரிவித்த பேரவை யின் பிற நோக்கங்கள் வருமாறு :

குறைந்தது ஒரு மாதத்திற்கொருமுறை இலக்கியம், வரலாறு அறிவியல் மெய்ப்பொருள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் ஒரு சொற்பொழிவுக்கேற்பாடு செய்யப்பெறும். உறுப்பினர்களை அல்லாமல் புரவலர்களைக் கொண்டு இயங்குவதால் பேரவைக்குத் தலைவர், செயலர், பொருளர்கள் இல்லை. இது வேறு எந்த இயக்கத் திற்கும் மாறாகவோ தடையாகவோ இயங்காது. குறிப்பிட்ட நிகழ்ச் சிக்குத் திரட்டப் பெறும் நன்கொடையைக் கொண்டு கொள்கை விளக்கத்திற்கு உகந்த வகையில் சிறுசிறு வெளியீடுகள் அச்சிடப் பெற்றுப் புரவலர்களுக்கு இலவயமாகவும் பொதுமக்களுக்கு மிகக் குறைந்த விலையிலும் வழங்க முயற்சி செய்யப் பெறும். ஆண்டிற் கொரு முறை கலை நிகழ்ச்சி நடந்தப் பெறும். ஒவ்வொரு கூட்டத் திலும் முந்தைய கூட்டத்தின் நிகழ்ச்சி முறைகளும் வரவு செலவுக் கணக்கும் வாய்மொழியாகவோ அறிக்கை வழியாகவோ அறிவிக்கப் பெறும். பேரவையின் ஆண்டு விழாவின் பொழுது பள்ளிச் சிறுர் களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப் பெறும். ஒவ்வொரு கூட்டத்திலும் முந்தைய கூட்டத்தின் ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்த சிறிது நேரம் ஒதுக்கப்பெறும்.

நல்ல பல நோக்கங்களுடன் தொடங்கப் பெற்ற நற்றமிழ்ப் பேரவை நன்கு வளர்ந்து செயற்பட நிறைந்த நெஞ்சுடன் தென் மொழி வாழ்த்துகிறது.

**4. கீழ் வேளூர் தமிழ் மன்றம்—நாகை :**

சென்ற 10-2-80 ஞாயிறு மாலை 7-30 மணியளவில் நாகப் பட்டினம், கீழ்வேளூர் அஞ்சு வட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளியில், கீழ்வேளூர் தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம், பாவலர்கோ திரு **கோவை. இளஞ்சேரன்** (அமைச்சர், நாகைத் தமிழ்ச் சங்கம்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிந்தனைச் செல்வர் திரு. **நா. ஆ. நாராயணசாமி,** அவர்கள் தொடக்கவுரைக்குப் பின் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** நெஞ்சக் கிளை தொத்தும் கிளி' என்னுந் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றினார். சிற்றூர்ப் புறமாயிருந்தும் அண்டையயல் ஊர்களிலிருந்து அறிஞர்களும் மாணவர்களும் திரளாக வந்திருந்து இரவு 10-30 மணி வரை அமைந்து சொற்பொழிவைக் கேட்டது குறிப்பிடத்தக்கது.

## பிற செய்திகள்

1. உ. த க. நெய்வேலிக் கிளையின் சார்பில் திருவள்ளுவர் புத்தாண்டு விழா, பொங்கல் விழா, பாவாணர் பிறந்த நாள் விழா, கடந்த சுறவம் 26 (9-2-80) காரி மாலை நடைபெற்றன. திரு. மு. சு. **மணி**, க. இ. தலைமையில் பண்ணிசை ஆய்வர் **குடந்தை சுந்தரேசனார்** 'தமிழிசை மரபு' என்பது பற்றியும், பாவரசு **முடியரசனார்**, 'பொங்கல் விழா' என்னுந் தலைப்பிலும், புலவர் **இறைக்குருவனார்** குறளமுதம் என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

2. பல்லடம், திருக்குறள் மன்றம் சார்பாகக் கடந்த சுறவம் 27 (10-2-80) ஞாயிறு காலை **பெருஞ்சித்திரனார் பாடல்கள்—'கனிச்சாறு' திறனாய்வரங்கம்'** நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. **கு. வெ. கி. ஆசான்**, க. மு. (மெய், பொருள், வர. அர); ச. இ. தலைமை தாங்கினார். திறனாய்வில், 'பெருஞ்சித்திரனார் பாடல்களில், தமிழுணர்வு. இந்தி யெதிர்ப்பு, இன எழுச்சி, நாட்டுணர்ச்சி, பொதுமை, இளைய தலைமுறை, காதல், இயற்கை, இறைமை என்னுந் தலைப்புகளில் முறையே, திருவாளர்கள் புலவர் செந்தலைக் கெளதமன் செ திருமேனி, நல். இளங்கண்ணன், க. இ., கு. இரணியன், க. மு, ப. வைரவ சாமி, ஞா. அரச. மெய்யறிவன், புலவர் கி. சண்முகம் க, இ, கோ. ப. சீரங்கசாமி, பொறி. பட், தென்மொழி க. தமிழப்பன் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தினர். அன்று பிற்பகல் நினைவுக் கலையேந்தல் திருக்குறள் **பெ. இராமையா** அவர்களின் பதின்கவனகம் (தசாவதானம்) நிகழ்ச்சி நடைபெற்ற பின், விழா இனிது நிறைவுற்றது.

3. கடந்த 17-2-80 ஞாயிறு காலை 7 மணியளவில், ஈரோடு பன்னீர்ச்செல்வம் பூங்கா அருகில், ஈழத் தமிழர் விடுதலைக்கு உலக நாடுகள் ஒன்றியப் பேரவையில் புரட்சிக் குரல் எழுப்பி உலகையே உலுக்கிய இலண்டன் வாழ் தமிழர் தலைவர் திரு. **கிருட்டிணா வைகுந்தவாசனுக்குப்** பாராட்டுக் கூட்டம் திரு **வேலா. அரசமாணிக்கனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை, திரு. **அரு. கோபாலன்** (மருமம் இதழாசிரியர்), இலங்கை தி. மு. க. முன்னாள் பொதுச் செயலாளர் திரு. **எசு. மணவைத் தம்பி**, கல்வெட்டாய்வுப் புலவர் **செ. இராசு**, க. மு. ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருவாளர்கள் **மா. கந்தசாமி**, க. மு; ச. இ; பா. உ., வழக்குரைஞர் கே. எசு. ஆனந்தம். வணி. இ; ச. இ, மா சுப்பிரமணியம், க. இ; ச. இ முதலிய அறிஞர்கள் பாராட்டுரை செய்தனர். இவ்வரவேற்பில் அனைத்து அரசியல் கட்சியினரும். பதினேழு தமிழ் வளர்ச்சி, இன எழுச்சி மன்றங்களும் கலந்து கொண்டனர். இறுதியில் அறிஞர் திரு. வைகுந்தவாசன் உணர்வு மிக்க உரை நிகழ்த்தி அனைவர்க்கும் நிறைவூட்டினார்.

4. காரைக்குடி தமிழ்ச் சங்கம் வழக்கம் போல் கடந்த 20-2-50 அன்று, தன் இரண்டாவது சங்கப் புலவர் விழாவைக் கொண்டாடியது. அன்று காலையில் விழாவரங்கமும் மாலையில் பொழிவரங்கமும் நடைபெற்றன. பேரா. **வெள்ளை வாரணனர்**, பர். **சி. பாலசுப்பிரமணியனர்**, பர். **வ. சுப. மாணிக்கனர்**, பர். **இரா. சாரங்கபாணி, ம. பொ. சி**, திரு. **சா. கணேசன்**, திரு. **கு. காளிமுத்து** பர். **அ. விசுவநாதன்**, பர். **சுப. அண்ணாமலை**, பர். **சத்திப்பெருமாள்** ஆகியோர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

## நன்கொடைகள்

1. திருக்கழுக்குன்றம். தேசுமுகிப்பேட்டை மறைமலையடிகள் மன்ற உறுப்பினரும், தென்மொழியன்பரும் ஆகிய திரு. **சு. செல்வம்** அவர்களின் துணைவியார் திருவாட்டி **கல்யாணி**க்குக் கடந்த 20-12-79 அன்று பிறந்த ஆண்மகவுக்குத் தமிழறிஞர் திரு. **தி நா. அறிவுஒளி** க. மு. அவர்கள் **பூங்குன்றன்** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா பத்து வரப் பெற்றோம். செல்வன் பூங்குன்றன் பல்வளமும் நலனும் பெருக வளர்ந்து தமிழ் இன நாட்டுத் தொண்டாற்றத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. திருச்சி, சங்கிலியாண்டபுரம், திரு. **பழ. அண்ணாத்துரை**, திருவாட்டி **விசயா அண்ணாத்துரை** ஆகியோர்க்குக் கடந்த சுறவம் 13 (27-1-80)-ஆம் பக்கல் மாலை பிறந்த ஆண் குழந்தையின் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 15 வரப் பெற்றது. விசயை பெற்ற வெற்றிச்செல்வன் பல்லாற்றானும் வளர்ந்து சிறந்து நாட்டுக்கும் மொழிக்கும் நற்றொண்டாற்றுமாறு, தென்மொழி மன நிறைவுடன் மகிழ்ந்து வாழ்த்துகிறது.

3. இலண்டன் தென்மொழியன்பர் உயர்திரு. **க. ஆண்டகை** (புருசோத்தமன்), **முழுநிறையம்மை** (சம்பூரணம்), இவர்கட்குக் கடந்த 7-2-80 அன்று பிறந்த ஆண் குழந்தைக்குச் **சோதி இராமலிங்கம்** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 55 விடுக்கப் பெற்றது. செல்வன் **சுடரழகுக் குறியோன்** (சோதிராமலிங்கம்) பன்னலமும் பல்வளமும் சிறக்கப் பெற்று நீடுழி வாழ்ந்து பெருந்தொண்டாற்றிப் பேரும் புகழும் பெறுக எனத் தென்மொழி நெஞ்ச நிறைவுடன் உவந்து வாழ்த்துகின்றது,

4. நெடுநாளையத் தென்மொழித் தொண்டரும் மின்பாறைத் தென்மொழி முகவரும் ஆகிய உயர்திரு. **கி. பாலு** அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா பத்து உவந்தளித்தார். உள்ளம் நிறை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

## நன்றியறிவிப்பு

எங்கள் அன்புச் செல்வியும் இரண்டாம் மகளுமாகிய **தேன்மொழி—அருளியர்** திருமணத்திற்கு அன்புகனிந்து நேரில் வந்து வாழ்த்திய அறிஞர்களுக்கும் பெரியோர்க்கும், தென்மொழி அன்புள்ளங்கட்கும், உறவினர்க்கும், தங்கள் வரவியலாமை குறித்து மடல்கள் வழியும் தொலைவரி வழியும் வாழ்த்துத் தெரிவித்த அன்பர் களுக்கும், சான்றோர்களுக்கும் எங்கள் நெஞ்சு நிறைந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**—பெருஞ்சித்திரனார்**
**—தாமரை பெருஞ்சித்திரனார்**

### திருமணத்திற்கு வந்த வாழ்த்துகளுள் அன்புள்ளம் ஒன்றின் பாவழி வாழ்த்து!

தென்மொழி ஆசான்றன் தேன்மொழியை அன்புருவை
நன்முறையில் மன்றல் நயந்தேற்றாய்! —கன்னல்சேர்
பொன்னிப்பே ராற்றுப் பொடிமணல் போலென்றும்
மன்னிநீர் வாழ்க மகிழ்ந்து!

செந்தமிழ்த் தோன்றல் திருவிடத்தின் சொத்தாக
வந்து பிறந்த வளர்கொடியை—முந்துதமிழ்க்
காதல் அகங்கொண்டு கைப்பிடித்தாய், ஆங்கதுவே
ஓதிய இன்பம் உணர்!

குன்று நிகர்நெஞ்சம்; கொள்கை பிறழாத
என்றனுயிர் நண்ப! இளந்தமிழா! —தென்றல்
தருமின்பம் தம்மனை தான்தவழ யாண்டும்
பெறுகவே பல்வளத்தின் பேறு!

பொல்லாக் குமுகாயப் புன்மை நிலைமாறி,
எல்லார்க்கும் எல்லாம் எனவாக!—வல்ல
தமிழர் வழங்கு தமிழோசை யார்க்கும்
அமிழ்தமென வாழ்க அகத்து!

நரிப்போல்வார் நாட்டில் நடமாடா நாளும்,
அரியேற்றின் தொண்டை அகங் கொண்டாய்;—வரிப்புலியே!
நந்தம் திருக்குறளை நாடுகின்ற வாழ் வமைத்துச்
செந்தமிழ்போல் வாழ்க சிறந்து!

**—கலியபெருமாள்.**
சேலியமேடு, பாகூர்-607402.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
காலம்! கல்லூரி மாணவர்களிடையே கூட இந்நிலை மிகுந்து காணப் படுகிறது. தமிழன் நிலை இவ்வுலகில் ஓங்கும் நாள் எந்நாளோ?

—**இரா. மனோகரன்**, பா. பச்சாபாளையம், காங்கயம்.

*0:752:* தமிழ்ப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம். தங்கள் தந்தையார் இயற்கையெய்திய செய்தி தமிழ் கூறும் நல்லுலகின் ஒரு பகுதியில் வாழும் எங்களுக்குக் காலம் நீடித்துத் தென்மொழிவழிக் கிடைத்துக் கவலுற்றோம். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாவலரை—தமிழ்க்காவலரை—பெருஞ் சித்திரனாரை உருவாக்கிய அவர்தம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப் பினை 'எந்தை' என்ற தலைப்பில் தாங்கள் தென்மொழியில் வெளி யிட வேண்டும். ஒரு பக்க அளவில் அவர்தம் உருவப் படத்தை வெளியிட்டுத் தோற்றம், மறைவு குறிப்பிட வேண்டும். துணைவரை இழந்த தங்கள் அம்மாவுக்கும் மற்றும் தங்கள் உடன் பிறந்தார் களுக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—**நா. அன்புச்செல்வன், ந. அரசத்திருமகள், ந. மலர்விழி, ந. செந்தாமரை**, திருப்பராய்த்துறை.

*0:753:* பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். தங்கள் தந்தையாரின் இறப்புச் செய்தியைத் தென்மொழி வாயி லாக அறிந்தேன். ஆறுத் துயருற்றேன். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினர்க்கும் எனது- எங்களது திருக்குறள் மன்றத்தின்—ஆழ்ந்த இரக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். தமிழனின் எழுச்சிக்குத் தாங்கள் ஆற்றி வரும் தொண்டு பல்லாற்றானும் ஓங்கத் தமிழன்னை தங்களுக்குக் கை கொடுக்க வேண்டுகின்றேன். —**செயலர் திருக்குறள் மன்றம்,**)

கிள்ளான் துறைமுகம் (மலேசியா)

*0:754:* அன்பார்ந்த பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். சான்றோர் எனக் கேட்டு மகிழ்ந்த தங்கள் குடும்பத் துயரத்தில் நாங் களும் பங்கு பற்றுகிறோம்.

—**பேரா. இல. க. இரத்தினவேல்**, மதுரை-20.

*0:755:* தனித்தமிழ்க் காவல! வணக்கம். அறிவுத் துறை யில் "மகனறிவு தந்தையறிவென்பர்" தமிழ்மொழி, திராவிடக் குமுகாயம், தமிழ் மெய்ம்மையாகிய முத்துறையிலும் சிந்தனைத் தெளிவுக் கருத்தினைப் பா வடிவிலும், சொற்பொழிவிலும் தென் மொழி உரையிலும் தந்து தமிழகத் தலைமையில் பீடு நடையிடும் தங்களை ஈன்று தமிழகத்திற்குப் பொதுமையாக்கிய தந்தையார் இயற்கை எய்திய செய்தியறிந்து இயற்கை மீது சீற்றம் கொண்டு வருந்துகிறேன். அன்னாரின் ஆதன் அமைதி யடைந்திட இயற்கை மொழியாம் தமிழன்னையை இறைஞ்சுகிறேன். தங்களது இல்லத்

தார்க்கும், ஏனையோர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொளகிறேன்.

—**தி. சா. நாகவரசன்,** செயலர் உ. த. க. திருச்சி-8.

*0:756:* அன்புசால் ஐயா, வணக்கம். சென்ற மாதத் தென்மொழி வழியாகத் தங்கள் தந்தையார் அவர்கள் இயற்கை எய்தியதைக் கண்டேன். மனம் கலங்கினேன். இயற்கையின் கூற்றுக்கு யார் என்ன செய்ய முடியும்? தந்தையாரின் பிரிவால் தவிக்கும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் என் ஆழ்ந்த மன வருத்தத்தைத் தெரிவிக்கின்றேன்.

ஆயிரக்கணக்கான தமிழ் உள்ளங்களுக்கு வழி காட்டியாகவும், வழி நடத்திச் செல்லும் தலைவனாகவும் தங்களைத் தங்கள் தந்தையார் பெற்றமைக்கு நாங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் இந்தத் தலைமையைப் பெற்ற அந்தத் தந்தையின் உள்ளம் கண்டிப்பாக எண்ணியிருக்கும்,

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்—(குறள்)

என்று. வான்மறை வள்ளுவனின் வழியில் தங்களை உருவாக்கிய அந்த நல்ல நெஞ்சம் அமைதி கண்டிருக்கும் என்றே எண்ணுகின்றேன்.

—**க க, ஆறுமுகம்,** அவிநாசி.

*0:757:* ஐயா, பெருமைக்குரிய தந்தையார் காலமான செய்தியினைப்—பல்வேறு நாளிதழ்கள் கிழமையிதழ்கள் தமிழ்நாட்டில் உலவியும் இத்துணைக்காலத் தாழ்த்தமாக அறிந்து கொள்ளும் நிலை எனக்கு ஏற்பட்டதே, இச் செய்தியால் பெரிதும் என்னுள்ளம் பதறிற்று. தாங்களும் தங்கள் கிளையுங் கேண்மையும் துயருற்று இருக்கும் நிலையில் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'சாம்போதும் தமிழ்ப் படித்துச் சாக வேண்டும் என், சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்'' என்ற பாவரிக் கொப்ப வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தந்தையரின் தகைமைசால் மைந்தர் பாவலரேறு அய்யா அவர்களின் தமிழ்ப்பணி வளரத் தமிழன்னை துணை நிற்கத் தூய நெஞ்சோடு இறைஞ்சுகிறேன்.

—**தென்மொழித் தம்பி. செ. அருள்இறைவோன்,** க. இ. மதுரை 7.

*0:758:* வணக்கம். சிங்கத் தமிழனை ஈன்ற செம்மல் தங்கத் தனித்தமிழை இத் தரையில் நிலைபெறுத்த மங்கா ஒளிவிளக்கை மண்ணுக்களித்திட்ட தங்கள் தந்தையின் ஈடுசெய்ய முடியா இழப்புக்குத் தமிழ்ச்சுடர் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—**மணிமுத்து,** ஆசிரியர் 'தமிழ்ச்சுடர்' பழனி.

*0:759:* பெருந்தகையீர், தங்களின் அன்புத் தந்தையார் இயற்கை எய்திய செய்தியைத் தென்மொழி வாயிலாக அறிந்தேன்.

தங்களின் அன்புத் தந்தையாரின் மறைவுக்கு எனது உள்ளாருத வருத்தத்தைத் தெரிவிக்கிறேன். எல்லாம் இறைவன் வகுத்த வழி!

—**உ. ச. எழில்**, வாழ்வாங்கி.

0:760: தமிழென்று முழங்குகின்ற சித்திரரே செந்
தமிழ்மொழியால் தலைநிமிர்ந்த தகுசான்றோரே!
தமிழனுக்குத் தமிழுணர்வை தழைக்கவைக்கும்
தமிழ்க்குலத்தின் நாயகத்தமிழ்ச் சிட்டுவேந்தே!

துயரமதில் மூழ்கிவாடும் துரைசாமிமகனே!
துரைமகனுய் தோன்றியநற் கொள்கைவேந்தே!
வயிரங்கொண்ட வாள்நீங்கித் தனித்திருக்கும்—பெரு
வயிரத்தோள் வாடினுற்போல் நிலையைப்பெற்ருய்!

தங்கத்தமிழ்த் சித்திரரேநும் துயரில்யான்
பங்குகொண்டேன் துயர்கொண்ட மனத்தாலின்று.
சங்குகொண்டே ஊதுகின்றேன் தூயர் நீவிர்
சங்கத் தமிழ் நூல்வளர்த்து வளர்க வாழ்க!

—**முத்துமாணிக்கம்**, நெய்வேலி-2.

0:761: அன்பிற்குரிய ஐயா, வணக்கம். தந்தையின் மறைவுச் செய்தியைப் பார்த்தேன். உள்ளம் வருந்தினேன். வீட்டில் என் மனைவியும், தங்கை தங்கம்மாளும் இந்தத் துயரச் செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியுற்றனர். தங்களுக்கும், அம்மாவிற்கும், தங்கை தம்பிகளுக்கும் என் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் உள்ளம் நெகிழ்ந்த ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்களது பணியில் தொடர்ந்து செல்ல எங்களது ஒத்துழைப்பை என்றும் தருவோம்.

—**ப. இளங்கோவன்**, பொறியாளர், மதுரை-க.

0:762: பாவலர் ஏறே! வணக்கம்! நீண்ட நாட்களுக்குப் பின்னர் தொடர்கிறேன். தீபம்—பார்த்தசாரதியின் எழுத்துத் திருவிளையாடல்களைப் பற்றிய தங்களது ஆசிரியவுரை, நடப்பியலில் உள்ள அவரது வல்லாண்மையையும் வலக்காரத்தையும் எடுத்துக் காட்டியது. கருத்தாழம் மிக்க தங்களது

"ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்
அசைத்ததா பகைவரை உன்றனின் வாயுரம்?"

"உன்னுடன் பிறந்தவன் உனையெதிர்க் கின்றான்
உன் பகைக்கே செருப்பாய்,உழைக் கின்றான்
உங்களை இரண்டாக்கி ஆரியன் வென்றான்."

"எத்தனை ஆண்டுகள் புரிந்தனை போரே:
இற்றதா ஆரியப்பார்ப்பனர் வேரே!"—பாடல்தான் நினைவுக்கு வந்தது.

—பேரா. **வி. அ. இளவழகன்**, அறி.மு., மெய். மு. திருவையாறு.

# தமிழர் நாகரிகமும் சிவனும்

—பெரியநாடன்.

சிவன் தென்னவர்க்குரிய தெய்வமென்பது தமிழறிஞர்கள் முடிவு. வெம்மை தண்மை எனும் இரு மூல ஆற்றல்களுள் வெம்மையைச் சிவனும் தண்மையைச் சிவையும் குறிப்பதற்காகத் தமிழர்களால் படைக்கப்பட்டார்கள் என்பது மறைமலையடிகள் கருத்து. இதன் பொருள் இயற்கை ஆற்றல்களின் உருவகமாகத் தமிழர்களால் முற்றிலும் கற்பனையாகப் புனையப்பட்டவன் சிவன் என்பதாகும். ஆனால் சிவன் முற்றிலும் கற்பனை உருவம்தானா என்பது கேள்விக்குரியதாகும்.

சிவனின் முழு உருவையும் மனத்தில் நிறுத்திப் பார்த்தால் பல வகையான பொருட்கள் அவன் மேனியில் காணக்கிடக்கும். அவை தலையில் பாம்பு, பிறை நிலவு, கங்கை முதலியனவும், கைகளில் நெருப்பு, சூலம், மழு, உடுக்கு முதலியனவும், இடையிலும் மேலிலும் மானுரி, மரவுரி, புலியுரி முதலியவையும், கழுத்தில் பாம்பு, நச்சுக்குறி, மண்டையோட்டு மாலை முதலியனவும் சிவனின் ஊர்தியாகிய ஏறும் ஆகியவையாகும். இவற்றைச் சிவன் அணிந்திருப்பதற்குப் பல தொன்மக் கதைகள் வழங்குகின்றன. தொன்மக் கற்பனையை விலக்கி அறிவியற் கண் கொண்டு நோக்கினால் பல புதிய செய்திகள் தோன்றும். ஒவ்வொன்றாக ஆயலாம்.

### தலை மீதுள்ள பாம்பு

தமிழ்ப் பழங்குடிகளில் மிக மூத்தவரென்று கருதப்படும் நாகர்கள் தம் தலை மீது படமெடுத்தாடும் நாகவடிவைச் சூடினார்கள். தமிழகத்திலும் உலகின் பிற பகுதிகளிலும் நாகத்தை வணங்கிய மக்கள் கூட்டங்கள் பலவுண்டு. இந்தியாவில் இன்றும் இவ்வணக்கம் மறையவில்லை. இந்நாகர்களால் தம் தெய்வமாக முதன் முதல் வணங்கப்பட்டவனே சிவனாக இருக்க வேண்டும்.

பாம்பு பற்றிய இன்னொரு செய்தியும் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கது. யூத மறை நூலில் வரும் பாம்பு பற்றியதுதான் அது. முதல் மாந்தனுக்கு அறிவுக் கனியைப் பறிக்கக் கடவுளையும் மீறி அறிவுரைத்தது ஒரு கருநாகப்பாம்பு. இப்பாம்புக் கதை மாந்தன் முன் கால்களைக் கைகளாக மாற்றிய நிகழ்ச்சியைக் குறிக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பாம்பின் நீளத்தில் மூன்றிலிரண்டு பகுதி உடலும் ஒரு பகுதி வாலுமாகும். பாம்பு, அதுவும் நாகப்பாம்பு தன் உடற்பகுதி முழுவதையும் உயர்த்தி நிமிர்ந்து நிற்கும் ஆற்றல் வாய்ந்ததென உயிர் நூல் கூறுகிறது. இதன்படி 15 அடிவரை வளரத்தக்கதாகிய ஒரு நாகம் 10 அடி உயரம் வரை எழுந்து நிற்கும். கால்களற்ற ஓர் உயிரி இவ்வளவு உயரத்துக்கு எழுந்து நிற்பதைப் பார்த்துத் தான் மாந்தனும் இரு கால்களில் நிற்கத் தொடங்கினானோ?

நிமிர்ந்த குரங்கு மாந்தன் பதினேழரை இலக்கம் ஆண்டு களுக்கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. மேலேயுள்ள நம் பூனேகோள் சரியானுல் இந்நிகழ்ச்சியும் அக்காலத்த தாக இருக்க வேண்டும். பாம்பை வணங்குவோரின் சாய்காலே முறிப்பதற்குத் தான் போலும் யூத மறைக் கதை தோன்றியது. யூத மறைக் கதை மாந்தன் முன்னங்காலேக் கையாகப் பயன்படுத்தத் தொடங்கியதையே குறிப்பிடுகிறதென்பதைக் காரல் மார்க்சு கீழ்க் கண்டவாறு கூறுகிருர். "Thus Nature becomes one of the organs of his activity, one that he annexes to his own bodily organs, adding stature to himself in spite of the Bible. ('முதல்' 1-ஆம் மடலம், பக்கம் 175)

இவ்வாறு சிவன் தலே மீதுள்ள நாகம் மாந்த நாகரிகத்தின் மீ முதல் நிகழ்ச்சிக்குச் சான்று கூறுகிறது.

### கையிலுள்ள நெருப்பு

நிமிர்ந்து நின்ற மாந்தனுக்கு எங்கும் அமைதியாக வாழ முடியாமல் கொடுவிலங்குகளின் அச்சம். விலங்குகளுக்கு அஞ்சிப் பெற்ற குழவியையும் போட்டு விட்டு ஓடவேண்டியிருந்தது. இன்றும் நரிக் குறவப் பெண்கள் மகப்பெற்றதும் குறைந்தது ஒரு கல் தொலேவாவது நடக்க வேண்டுமென்ற மரபைக் கடைப்பிடிப்பது அன்றைய பழக்கத்தின் நிழல் தானே?

இந்த அச்சத்திலிருந்து மாந்தனே விடுவித்தது நெருப்பைச் சுடாமல் கையாள முடியும் என்ற அவனது கண்டுபிடிப்புதான். நெருப்பை வளர்த்து விலங்குகள் அண்டாமல் விலக்கிய பின்பு மாந்தன் அமைதியாக வாழ முடிந்தது; அவனுல் தொடர்ந்து முன் னேற முடிந்தது. மாந்தனின் இந்தக் கண்டுபிடிப்பையே சிவனின் கைகளிலொன்றின் மீது கொழுந்து விட்டெரியும் நெருப்பு குறிக்கிற தென்று கூறலாமன்றோ?

### பிறை நிலவு

நிலத்தில் உலவும் மாந்தனும் விலங்குகளும், ஏன் நிலத்திணே களும்கூட இரவு பகல் உணர்வைத் தவிர்க்க முடியாது. ஆனுல் நாளே விட நீண்ட காலக் கெடுவை எப்படி மாந்தன் கண்டான்?

கதிரவனேக் கண்ணுல் நேரடியாக நோட்டமிடுவது எளிதன்று. ஆனுல் நிலவோ இரவில் வானில் காணப்படும் பொருட்களில் பெரி தாகத் தோன்றுவது; நிலத்துக்கு அதிக ஒளி தருவது. அது மட்டு மன்று அதில் மாறி மாறித் தேய்வும் வளர்வும் தெளிவான ஓர் இயற் காட்சி. எனவே நிலவைக் கொண்டே இரவு பகல் தவிர்த்த ஒரு கால முறையை முந்தியல் மாந்தன் காண முடிந்தது. காருவா, வெள்ளுவா நாட்களே அடிப்படையாக வைத்துத் தன் செயல்களே

முன் கூட்டியே திட்டமிட முடிந்தது. உலகில் முதலில் மாதங்கள் திங்களேயே அடிப்படையாகக் கொண்டிருந்தன. யூதர்களும் முகமதியர்களும் இன்றும் பிறை மாதங்களேயே கடைப்பிடிக்கின்றனர். இந்தியாவில் வெள்ளுவா அடிப்படையிலேயே மாதங்கள் கணிக்கப் படுகின்றன. அறுவை (சித்திரை), முறம் (விசாகம்), பனை (அனுடம்) போன்ற நாண்மீன்களில் வெள்ளுவா வரும் மாதங்கள் அந்நாண்மீன்களின் பெயரடிப்படையில் பிறந்த பேராலேயே அழைக்கப்படுகின்றன. (எ. கா. சித்திரை, வைகாசி, ஆனி). இந்த ஆண்டு ஆவணி அவிட்டம் ஆடி மாதத்திலேயே வந்ததும் இக் காரணத்தாலேயே. அது மட்டுமன்று மாதத்தைத் தமிழில் திங்கள் என்று கூறுகிறோம். மாதம் என்ற சொல்லும் மதி என்ற சொல்லி லிருந்து பிறந்ததே. மாதத்தை (காலத்தை) மதிக்க உதவியதா லேயே நிலவு மதியெனப்பட்டது. ஆங்கிலத்தில் கூட Month என்ற சொல் Moon என்ற சொல்லடிப்பிறந்ததே.

நம் நாட்டில் ஆண்டு பகலவனின் தென்வடல் செலவினடிப் படையிலும் மாதம் நிலவின் வளர்வு தேய்வுகளினடிப்படையிலும் அமைவதாலேயே ஆங்கில மாதங்களேப் போன்று மாதங்களின் நாட்கள் ஒரு சீராயில்லாமல் 28 முதல் 32 நாட்கள்வரை ஒழுங்கற்று வருகின்றன. எனவே தமிழன் நிலவு கொண்டு மாதம் வகுக்கக் கற்றதையே சிவனின் தலையிலிருக்கும் பிறை நிலவு குறிக்கிறதென்று கொள்ளலாமன்றோ?

## முச்சூலம்

காட்டெருமை மிகுந்திருந்த மைசூர் எனப்படும் எருமையூரிலும் கல்கத்தா எனப்படும் காளிக்கோட்டத்திலும் மக்கள் மிகுதியாக வணங்கும் தெய்வம் காளி. இவளேயே

"கானத் தெருமைக் கருந்தலே மேல் நின்றுயால்..."

எனச் சிலம்பு கூறும். இவளது கருவி முச்சூலமே. எனவே இக்கொடு விலங்கைக் கொல்வதற்கு முக்கவையுடைய கருவிகளேயே முந்தியல் தமிழர்கள் பயன்படுத்தினர் எனக் கொள்ளலாம். எருமையூர், காளிக் கோட்டம் எனும் தமிழ்ப் பெயர்களே இங்கு முன்பு வாழ்ந்தவர் தமிழர் என நிறுவுவதற்குப் போதுமானவை. இக்கருவியின் முதற் புனைவையே சிவன் கையிலுள்ள முச்சூலம் குறிக்கிறது.

## உடுக்கு

தமிழர்க்குச் சிறப்பான தோற்கருவி உடுக்காகும். இது முதன் முதலில் மண்ணுல் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. உடுக்கு வடிவி லுள்ள மட்பாண்டங்கள் அகழ்வுகளில் காணப்பட்டுள்ளன. மண்ணுல் செய்யப்பட்ட வேறெந்த தோற்கருவியும் காணப்பட்டதாகத் தெரிய வில்லே. எனவே இதனேயே முதற் தோற்கருவி எனலாம். பிற

வாச்சியங்களைச் சிவனின் பூத கணங்கள் சுமந்திருப்பது இங்கு கருதத்தக்கது.

**கோடரி**

முந்தியல் மாந்தன் வேட்டையாடுவதற்குக் கற் கோடரிகளைப் பயன்படுத்தினான். பின்னர் தோணிகளைப் புனையவும் பிற நோக்கங்களுக்காகவும் மரங்களைச் செதுக்கப் பிடியில்லாக் கோடரிகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பிடிவைத்த கோடரியைப் புனைந்த பின்னரே மரங்களை வெட்டி வீழ்த்தி வீடுகள், படகுகள் முதலியவற்றைத் திருந்தப் புனையவும் காடுகளைப் பெருமளவில் அழிக்கவும் இயன்றிருக்கும் இத்தகைய ஒரு புனைவையே சிவன் கையிலிருக்கும் கோடரி குறிக்கிறது.

காடு மண்டியிருந்த மலையாள நாட்டைத் திருத்தி மக்களைக் குடியிருத்திய பரசுராமன் மழுவைப் படையாகக் கொண்டவன். பரசுராமனே மலையாள நாட்டினரின் முகாமைத் தெய்வம். தொன்மக் கதையும் இதனையே வலியுறுத்துகிறது. இவ்வாறு சிவனின் கையிலிருக்கும் கோடரி மாந்த நாகரிக வளர்ச்சியின் ஒரு படியின் அடையாளமே.

**கங்கை**

பகீரதன் எனப்படும் பல்தேரான் வானிலிருந்து கங்கையைக் கொணர்ந்தான். அது கட்டுப்படுத்தவொண்ணா வகையில் பாய்ந்து உலகை அழித்து வருவதைக் கண்டு அவன் சிவனை வேண்ட அவர் அதனைத் தன் முடியில் கட்டி வைத்தார் என்பது தொன்மம்.

இயற்கை மழைப் பொழிவின் உதவியால் வேளாண்மை செய்த மாந்தன் ஆற்று நீரைக் கட்டுப்படுத்தித் திருப்பவும், மழை நீரைக் குளங்களில் கட்டி வைக்கவும் கற்ற போது வேளாண்மை விரைந்து வளர்ந்தது. கங்கை யென்பது மழை யென்றும் நீரென்றும் பொதுவில் ஆறென்றும் கிணறென்றும் பொருள் தரும். வான கங்கை (ஆகாய கங்கை) எனப்படுவது மழையே யென்பதில் சிறிதும் ஐயத்திற்கிடமில்லை. இத்துடன்

> "முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்று
> இடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
> பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
> மழை பிணித் தாண்ட மன்னவன்..."

எனும் சிலம்பின் வரிகளை இணைத்துப் பார்த்தால் பாண்டியனையே மேற்கூறிய தொன்மக் கதை கூறுகிறதென்று கூறலாமன்றோ? இவ்வாறு சிவன் முடியிலணிந்திருக்கும் கங்கை தமிழன் முதன் முதலில் பாசனத்தைக் கண்டதைக் குறிக்கிறது.

### மரவுரி, மானுரி, புலித்தோல்

மரவுரியும் விலங்குத் தோலும் முந்தியல் மாந்தனின் முதல் ஆடைகள். இவற்றையே சிவன் அணிந்திருக்கும் இவ்வுரிகள் குறிக்கின்றன.

### கழுத்திலணிந்துள்ள பாம்பும் நச்சுக் குறியும்

இந்தியா போன்ற வெப்ப நாடுகளிலேயே உலகின் பெரும் பான்மையான நச்சுப் பாம்புகள் வாழ்கின்றன. நம் நாட்டில் முன்னுளிலிருந்தே நச்சுயிரிகளின் நஞ்சை இறக்குவதற்குப் பல்வேறு வகை மூலிகைகளும், கற்களும் மந்திரங்களும் உள்ளன. இவற்றின் வியத்தகு ஆற்றலை ஐயமற அறிந்த மேலையர்கள் அவற்றைப் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நச்சுப் பாம்பு கடித்தால் சாவே உறுதியென்றிருந்த அச்சம் தமிழனுக்கு நீங்கிய தையே சிவன் கழுத்திலுள்ள பாம்பும் நச்சுக் குறியும் உணர்த்து கின்றன.

### மண்டையோட்டு மாலை

தமிழ்நாட்டின் மிகப் பண்டை மருத்துவ முறைகளுள் வற்ம எனப்படும், மரும மருத்துவம் ஒன்றுகும். உடலிலுள்ள நரம்புச் சந்திப்புகளைக் கண்டு அவற்றைத் தடவியும் தட்டியும் சீரமைப்பதன் மூலம் பல நோய்களைத் தீர்க்கவும் உண்டாக்கவும் முடியும். சீனர் களின் சிறப்பு மருத்துவமான அக்கூ பஞ்சர் இவ்வற்ம முறையின் ஒரு வளர்ச்சி நிலையே. இம்முறை இப்போது மலையாள நாட்டிலேயே சிறப்பாக வழங்கி வருகிறது. நெல்லை மருத்துவக் கல்லூரியில் இதற்கென்று ஒரு பிரிவு இருக்கிறது.

இந்த மருத்துவ முறையைத் தமிழர்கள் கண்டுபிடிப்பதற்கு உடலிலுள்ள எலும்புகள், நரம்புகள் அனைத்தின் அமைப்பையும் செயற்பாட்டையும் முற்றத் தெரிந்திருக்க வேண்டும். உயிருடனுள்ள மாந்தனின் உடலில் தடவியும் தட்டியும் பார்த்தும் பிணங்களை அறுத்துப் பார்த்தும் சிதைந்த உடலிலுள்ள எலும்புகளைப் பிரித்தும் பொருத்தியும் பார்த்துமிருக்க வேண்டும். இவற்றைச் செய்ய மிகத் தோதான இடங்கள் சுடுகாடும் இடுகாடுமே.

இவ்வாறு நரம்புகள் எலும்புகளின் அமைப்பை அறிந்து கொள்ள இடுகாடு சுடுகாடுகளில் அலைந்த ஒருவனைத் தான் சிவன் கழுத்திலுள்ள மண்டையோட்டு மாலை குறிக்க வேண்டும்.

### ஏற்றூர்தி

நம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் வேளாண்மையிலும் வாணி கத்திலும் அஃதாவது பண்டங்களின் பங்கீட்டுக்காக அவற்றைச்

சுமந்து செல்வதிலும் மாட்டை விட மீப்பெரும் பயன் தரும் விலங் கேதுமில்லை. மேலே நாம் கண்ட பொருட்களுடன் ஒப்பிடும்போது காளை சிவனின் ஊர்தியாக விளங்குவதும் அதன் மீப்பெரிய பயனைக் கருதியதாகவே இருக்க வேண்டும்.

## ஆண் பெண் வடிவம்

சிவன், பாதி ஆணும் பாதி பெண்ணும் கலந்த வடிவமாகவும் காட்டப்படுகிறுன். மேற்கூறிய கண்டுபிடிப்புகளுள் சில பெண் களுக்கும் உரியனவாக, காளிக்குரிய முச்சூலம் போன்று இருக்கலா மாகையால் இக்கலப்பு வடிவு கொள்ளப்பட்டது போலும். மேலும் நிலத் தென்கோடி முதல் நடுக்கோட்டுக்கு வடக்கு வரை பரந்து கிடந்த குமரிநாட்டில் வெள்ளையர் ஒரு கோடியிலும் கறுப்பர் இன் னொரு கோடியிலும் தோன்றிக், கடற்கோளால் நிலம் சுருங்கிய பின்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தபோது அவரின் ஒற்றுமை கருதி செந்நிற ஆண் வடிவமும் கருநிறப் பெண் வடிவமும் கொண்ட வனுகச் சிவன் வடிவு புனையப்பட்டிருக்கலாம்.

முடிவாக இவ்வாறு சிவன் அணிகலன்களாகவும். அணிகல மாகவும் (வாகனம்) உள்ளவை ஐயத்திற்கிடமின்றி முந்தியல் மாந் தனின் வெவ்வேறு துறை முதற் கண்டுபிடிப்புகளையும் புதுப் புனைவு களையும் சுட்டுவதிலிருந்து கிழ்க்காணும் முடிவுக்கு வரலாம். முதலில் நாக வணக்கத்துக்காகப் புனையப்பட்ட மாந்த வடிவத்துக்குப் புதிய கண்டுபிடிப்புகளையும் புனைவுகளையும் சேர்த்து வந்தனர். காளி, பரசுராமன், பல்தேரான் போன்று தனித்தனி மாந்தர்க்குரியன வற்றையும் சிவனுக்குச் சூடினர். இதன் விளைவாகத் தமிழனின் முந்தியல் நாகரிகத்தின் அரும்பொருட் காப்பகத்தின் ஒரு தாங்கி யாகவே (Stand) சிவன் வடிவம் விளங்குகிறது. தாங்கியின் இரு கைகளும் போதாத போது கூடுதல் கைகள் இணைக்கப்பட்டன.

இந்தக் கண்டுபிடிப்புகளும் புனைவுகளும் மாந்த இனம் முழு மைக்கும் உரியவையானுலும் தென்னுடைய சிவனைப் போன்று ஒரே தெய்வத்தில் இவை வேறெங்கும் திரட்டி வைக்கப்படவில்லை. எனவே இக்கண்டுபிடிப்புகளும் புனைவுகளும் வெளி நாகரிகங்களி லிருந்து கடன் பெறப்படாமல் இங்கேயே தோன்றியவை மட்டு மன்று இங்கிருந்தே இவை உலகின் பிற பகுதிகளுக்குப் பரவின என்றும் முடிவு செய்யலாமன்றே? தென்னக நாகரிகத்துக்கு இத் தென்னகமே பிறப்பிடமென்பதற்கும் இங்குள்ளோரனைவரும் கறுப்ப ராயினும் வெளுப்பராயினும் இங்கே தோன்றியவர்களே என்பதற்கும் சிவனே மறுக்க முடியாத சான்றன்றே? o

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

—மருத்துவ அறிஞர். **கோ. கோவிந்தனார்.**

**மூளையும் முதுகுத்தண்டும்:**

சில வேளைகளில் மக்களிடையே காணப்படும் விலங்குகள் போன்ற நடத்தை மேலே விளக்கிய முன்னேற்றம் முழுமையை அடையவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. விலங்கில், தானே நடத்திச் செல்லத்தக்க ஆற்றல் படைத்த முதுகுத்தண்டு, இன்றைய நாகரீக மாந்தனில், தானே நடத்திச் செல்லும் ஆற்றலை இழந்து, மூளையின் ஆட்சிக்குக் கீழ்பட்டு, அடங்கி மூளை சொல்கிறபடி பணிந்து நடக்கிறது. ஆனால் யார் ஆட்சிக்கு யார் உட்படுவது என்பது பற்றி, மூளைக்கும், முதுகுத் தண்டிற்கும், இடைவிடாது போராட்டம் நடந்து கொண்டே வருகிறது. மூளை வரம்பிலாற்றல் படைத்ததன்று. முதுகுத்தண்டு மூளையின் ஆட்சியில் குறுக்கிட, இடைவிடாது முயன்று கொண்டே இருக்கிறது. இதனால் மூளை, முதுகுத்தண்டின் மேல் அடங்காத சினம் கொண்டு, விரிவான தடைகளை உண்டாக்கி, முதுகுத்தண்டிலிருந்து வரும் பால் உணர்ச்சிக் கிளர்ச்சிகளைத் தடுத்து, அவற்றை வேறு வழியில் திருப்பிவிடுகின்றது. ஆகவே மூளையும், முதுகுத்தண்டும் பால் உணர்ச்சி பற்றி நேர் எதிரிடையில் மிக வலுவாக வேலை செய்கின்றன. பல வேளைகளில் இப்போட்டி சமநிலையில் நின்று விடுகிறது. அந்த நிலையில் மாந்தன் மன அலித்தன்மை அடைகிறான்.

**மன அலித்தன்மை**

மன அலித்தன்மையை இரண்டு வகை அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிக்கலாம்.

1. முழு இன்பம் அடையுமுன்பே விந்து வெளிப்படல். இது **விரைவு விந்து வீழ்கை** எனப்படும்.

2. ஆண்குறியின் எழுச்சி இல்லாதிருத்தல், அல்லது எழுச்சியில் கோளாறு ஏற்படல், அல்லது எழுச்சி விரைவில் மறைதல்.

ஆண்குறியின் எழுச்சியில் ஏற்படும் கோளாறுகள்தாம் மன அலித்தன்மை ஏற்பட தலையாய காரணங்கள். இவ்வெழுச்சிக் கோளாறுகளே உறுப்பு அலித்தன்மைக்கும் தலையாய காரணங்களாம். இந்த இரண்டு அலித்தன்மைகளும் ஒரு மாந்தனிடமே காணப்படலாம். அந்நிலையில் உள்ள மாந்தன் ஐயுறவிற்கு இடமின்றி அலித்தன்மை உடையவனே. அவனால் புணரவும் முடியாது. தலைமுறைக்கு வித்திடவும் முடியாது.

மன அலித்தன்மை மன நிலையாலும் உள்மனத் தன்மையாலும் உண்டாகலாம். இந்நிலைகளால், பால் உணர்ச்சிக்குப் பலவகைத் தடைகளும், கட்டுப்பாடுகளும் ஏற்படுகின்றன. அதனுல் பால் உணர்ச்சி மரத்துப் போகிறது. உள்மனத்தின் நிலையில் அலித் தன்மை இருக்கும் வரையில் நோயாளிக்குத் தான் அலித்தன்மையால் தாக்கப்பட்டிருப்பதாகவே தெரியாது. வெளிப்படையான அச்சமோ, நோக்கங்களோ, பால் உணர்ச்சியின் வன்மையை பெரும்பான்மையும் குறைப்பதில்லை. மன அலித்தன்மையால் ஏற்படும் தடைகள் அல்லது கிளர்ச்சிகள், பால் உணர்ச்சியில் புகுந்து, முதுகுத்தண்டி லிருந்து புறப்படும் பால் உணர்ச்சிக் கிளர்ச்சிகளை வன்மை இழக்கச் செய்கின்றன அல்லது அழிக்கின்றன. மனத்திரையில் எவ்வளவு ஆழத்திற்குப் பதிந்திருக்கின்றனவோ அந்த அளவிற்குத் தன்மை யிலும், வன்மையிலும் அவை மாறுபடுகின்றன. தொடக்க நோயாளி களைப் பேச்சின் மூலமாகவே நலமாக்கி விடலாம் இவர்களுக்கு மருத்துவம் செய்வதால் எவ்வகை நேரிடையான நன்மையும் ஏற்பட்டு விடாது. ஏன் எனில் இவர்களின் கலவி உறுப்புகள் எல்லாம் நல்ல நிலையிலேயே உள்ளன. இஃதை உறுதி செய்வது போல், இந்நோயாளிகளுக்கு வலுவான காலை எழுச்சி உண்டாகிறது. கலவி உறுப்புகளில் கோளாறு இருக்குமாயின் ஆண்குறியின் எழுச்சி எவ்வகைக் காரணம் கொண்டும் ஏற்பட வழியே இல்லை. தூக்கத்தில் இத்தடை தற்காலிசமாக நீக்கப்பட்டு எழுச்சி உண்டா கிறது. ஆனல் புணர்ச்சி செய்ய முயலும் பொழுது தடை மறுபடி யும் தோன்றி, எழுச்சி இல்லாதபடி செய்துவிடுகிறது. மேல் தளவாட மருந்துகளைக் கலவி உறுப்புகளின் மேல் தடவினுல், நேரிடை நன்மை ஏற்படாவிடினும், மறைமுகமாக நன்மை உண்டாகலாம். இவ்வகை மருந்துகளினுலோ அல்லது உணவுகளினுலோ நோயாளி யின் மனதில், அவர் மறுபடியும் நல்ல நிலையை அடைந்து விட்டார் என்ற நம்பிக்கையை ஊன்ற வேண்டும். நம்பிக்கை வளர்ந்து வளர்ந்து உள் மனதில் நன்கு உருவாகிறது. இந்த நம்பிக்கை தடை களை எல்லாம் வெற்றிகரமாக முறியடிக்கிறது. அதனுல் பால் உணர்ச்சிக் கிளர்ச்சிகள் மறுபடி தோன்றி, தடையின்றித் தங்கள் வேலைகளைச் செய்கின்றன.

மன அலித்தன்மை பல்வேறு மூலங்களிலிருந்து தோன்றுகிறது. ஒவ்வொரு மூலத்திலும், அமைதி இன்மை, தொல்லை, அச்சம் அல்லது ஏதோ ஒருவகை நினைப்பு, இவற்றில் ஒன்று மன அலித்தன்மை தோன்றத் தூண்டுகோளாக இருக்கும். எடுத்துக்காட்டாக: புணர்ச்சியை மனதால் நினைப்பது கூட குற்றம் என்ற எண்ணத்தை உள் மனதில் பதித்துப் புணர்ச்சி நோக்கை அடக்குவதிலேயே பலர் அரும்பாடுபடுகின்றனர். இது பிள்ளைப் பருவத்தின் கோளாறு. குழந்தையின் சுற்றுப்புறமும், குறுகிய கட்டுப்பாடான கல்வி முறை யும், அற நூல்கள் என்ற பெயரால் கற்றுக் கொடுக்கப்படுவன

வற்றுலும், பிற நிகழ்ச்சிகளாலும், அச்சிறு அகவையிலேயே பெண்ணுடன் சேர்க்கை பற்றிய எண்ணம் ஆழப்பதிந்து வாழ்க்கை முழுவதும் நின்று நிலவுகிறது. அச்சிறுவன் வளர்ந்து இளைஞனுகிருன். அந்த இளைஞன் தன் மனைவியுடன் புணரும்பொழுது இயற்கையாக எழக்கூடிய ஒவ்வொரு கிளர்ச்சியும் அந்த இளைஞனின் மனத்தன்மையால், தடை செய்யப்படுகிறது. அதனுல், அந்த இளைஞனுக்குக் குறை அலித்தன்மையோ, அல்லது முழு அலித்தன்மையோ உண்டாகிறது. சிலர், பெண்ணைப் புணர்தல் தூய்மையற்ற, அடாத செய்கை என்றும், புணரும் பெண்ணை மாசுபடுத்துவதாகவும் நினைக்கின்றனர். அப்பேர்ப்பட்ட ஒருவர், தான் விரும்பும், மதிக்கும் மனைவியிடம் இன்பம் துய்க்க முடியாமல், விலைமகளிரை நோக்கி ஓடுகிருர். விலைமகளிர் இப்பொழுதுள்ள நிலைக்கு மேல் மாசுபட்டுப் போகார் எனவும், அவர்களைப் புணர்தல் ஓர் அடாத செய்கை அன்று எனவும் அவர் நினைக்கிருர். அதனுல் அவ்விலைமகளிரிடம் அவர் ஆண்மையுடன் நடந்து கொள்கிருர். அப்பொழுது அவரிடமுள்ள அலித்தன்மை நீங்கிவிடுகிறது. சிலர், தங்கள் நிலைக்குக் கீழான பெண்களையே மணக்க விரும்புகின்றனர்.

தொல்லை, அச்சம் சுருங்கக் கூறின் மன அழுத்தம், எக்காரணத்திலாவது மன அமைதி இன்மை, திடீர் மனப் போராட்டம், திடீர் அச்சம், தாங்க முடியாத துக்கம், அதிர்ச்சி, ஆகியவற்றில் ஒன்று ஏற்பட்டால் மன அலித்தன்மை உண்டாகலாம். பணத் தொல்லை உள்ளவர்கள் மஞ்சள்தாள் கொடுத்தவர்கள், வாணிப முறிவு ஏற்பட்டவர்கள் ஆகியவர்களுக்கும் மன அலித்தன்மை உண்டாகலாம். ஒரு மாந்தன் இயற்கையாக வாழ்ந்து கொண்டிருக்கிருன் என்று கொள்வோம். அவன் உறுப்புகள் எல்லாம் நல்ல நிலையில் உள்ளன. இருப்பினும் அவன் தன்னுடைய ஆண்மையைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிருன் என்று கொள்வோம். அக்கவலையே அவனை நாளடைவில் அலித்தன்மை அடையச் செய்யும். புதிதாக மணமானவர்களுக்கு இத்தொல்லை அடிக்கடி ஏற்படும். திடீர் அச்சமோ, அதிர்ச்சியோ அவை ஏற்பட்ட நேரத்திலேயே அலித்தன்மையை உண்டாக்க வல்லன. எதிர்பாராமல் சிறைப்படக்கூடியவர்களுக்கு எழுச்சித் தன்மையே அற்றுப் போவதுடன், இன்பம் துய்க்க நினைக்கும் நினைப்பே பல காலத்திற்கு இல்லாமல் போகிறது. நீண்டநாள் அச்சத்துடனும், மன உளைச்சலுடனும் ஒருவன் இருப்பானேயாயின் அவன் எவ்வளவு வலு உள்ளவன் ஆயினும் சரி, மேலே கூறிய நிலை வந்தே தீரும். எடுத்துக்காட்டாக, உலக மா போரில் ஈடுபட்ட மறவர்களை எடுத்துக் கொள்ளலாம். அவர்களில் பெரும்பாலோர் அலித்தன்மையால் தாக்கப்பட்டனர். மணமானவர்கள், சண்டையின் நடுவிலும், தங்கள் மனைவியருடன் இனிது வாழ, திரும்பிச் செல்வதையே நினைந்திருந்தனர். போரிலிருந்து திரும்பியதும், அந்தோ! அவர்கள் முழுக்க முழுக்க, தங்கள் மனைவியரைப் புணர இயலாதவர்களாகவே இருந்தனர். சிலர்

நாளாவட்டத்தில் அலித்தன்மை நீங்கப் பெற்றுத் தங்கள் பழைய இயற்கை நிலையை எய்தினர். பலர், தாங்கள் அலித்தன்மை உடையவர்களாக இருக்கிறோம் என நினைந்து, நினைந்து உருகி, முற்றிய அலித்தன்மைக்கு ஆளாகினர்.

பலசிறு காரணங்களாலும் மன அலித்தன்மை உண்டாகலாம். மிகுதியான நாணம், உடலை அல்லது கலவி உறுப்புகளைத் திறந்து காட்டக் கூசுதல், தான் புணரும் பெண்ணுக்குத் துன்பம் உண்டா குமோ என்ற நினைப்பு, ஆகியவற்றாலும் மன அலித்தன்மை உண்டாகலாம். மதக் கோட்பாடுகளில் மிகுதியாக ஊறியவர் களுக்கும் இந்நிலை உண்டாகிறது. உலகில் பல மதங்கள் (தமிழ் மதம் அன்று) பால் உணர்ச்சி வெறுக்கத்தக்கது, அஃதை எவ்வளவு அடக்க முடியுமோ அவ்வளவு அடக்க வேண்டும் என அறிவுறுத்து கின்றன. இந்தக் கூற்றை ஒருவன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டானானால், புணர்ச்சி செய்தல் கரிசானது, கடவுளுடைய கட்டளைக்குப் புறம்பானது என நினைக்கின்றான். இந்த நினைப்பை எல்லாம் மீறி அவன் புணர்ந்தாலும் முன் நினைந்த நினைப்பு அவனை வெறுமனே விடுவதில்லை, அவன் பிடரியைப் பிடித்துத் தள்ளி அவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றது. உலகில் செய்யக் கூடாத ஒரு குற்றத்தை அவன் செய்து விட்டதாக எண்ணச் செய் கின்றது. இந்த அச்சமே அவனை அலித்தன்மை உடையவனாக்கு கின்றது. மதத்தில் பழுத்த பழங்கள், தங்களுடைய ஆண்மையைக் கடவுளின் பூந்தாள்களுக்கே படையலாகச் செலுத்தி, அலித்தன் மையை விருப்புடனேயே ஏற்றுக் கொள்கின்றனர்.

### பெற்றோர் சிலரின் பிழைகள்

பெற்றோர்களில் சிலர் தங்கள் குழந்தைகளிடம் பிழைபட நடந்து கொள்கின்றனர். குழந்தை வளர்ந்து பெரியவன் ஆன பின்னும் கூட சிறு குழந்தை எனவே நினைந்து அவனிடம் நடந்து கொள் கின்றனர். அவனும், பெரியவன் ஆகியும், தான் குழந்தைப் பருவத் தில் இருப்பதையே பெரிதும் விரும்புகின்றான். குழந்தைப் பருவத் திற்குத் துயரம், தொல்லை, பொறுப்பு ஆகியவை கிடையா. ஆகவே அந்நிலையிலேயே தங்கி, அந்த நிலைக்கு ஏற்ற செய்கைகளைச் செய்வதிலேயே முனைகின்றான். அஃதாவது அவன் தன்னை வளர்ந்த மாந்தனாக நினைக்க மறுக்கின்றான். இப்பேர்பட்ட குணம் உள்ளவர் களைத் திருத்துவது மிக மிகக் கடினம். தூங்குபவர்களை எழுப்ப லாம். விழித்துக் கொண்டிருப்பவர்களை, அஃதாவது தூங்குவதாக நடிப்பவர்களை எழுப்ப முடியுமா?

மணமகன் அலித்தன்மை என்பது ஒரு தனி இனத்தைச் சார்ந்தது. அடிப்படையில் மற்ற அலித்தன்மைகளுக்கும் இதற்கும் வேறுபாடில்லை. புதிதாக மணமானவன், தன் ஆண்மையை இது

குறிப்பு-1

# உடல் நலம் - மருத்துவம்

## சில பயனுள்ள குறிப்புகள்

- உணவில் உப்பைச் சேர்த்துக் கொள்வதால் நரையும் புளியைச் சேர்த்துக் கொள்வதால் உடலில் திரையும் ஏற்படுகின்றன என்று சித்தர் நூல்கள் தெரிவிக்கின்றன.
- வெள்ளைப்பூண்டு உடலில் ஏற்படும் அரத்தக் கொதிப்பை(Blood Presure) குறைக்கின்றது. உடல் வலிமை பெற உதவுகிறது. நாடி நரம்புகள் வன்மை பெறச் செய்கிறது. வயிற்றில் சேரும் வளியை அகற்றுகிறது; சூட்டைத் தணிக்கிறது.

காலையில் இஞ்சி; கடும்பகல் சுக்கு;
மாலையில் கடுக்காய் மண்டிலம் சாப்பிடின்
கோலை ஊன்றிக் குறுகி நடப்பவன்
காலை வீசிக் குலுக்கி நடப்பனே! —தேரையர்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வரை ஆய்வு செய்ததில்லை. தன் வெற்றி குறித்து ஒருவகை ஐயம் எழுகின்றது. ஒரு கன்னியின் பெண்குறியில் தன் ஆண்குறியை நுழைக்கப் போகின்றான். தன் அன்புக்குரியாளை சிறுமை செய்து விட்டோமோ என்ற நினைப்பு உண்டாகின்றது. இவ்வகையான சூழ்நிலையாலும் எண்ணங்களாலும், உந்தப்பட்டு, தன் முயற்சியில் தோற்றுவிடுகிறான். இத்தோல்வியை மனத்தில் பதியாது, தன் ஆண்மையைப் பற்றி மட்டும் கவலை கொள்வான். ஆனால், சிறிது நாள் பழக்கத்திற்குப் பின் வெற்றி ஏற்படலாம். தோல்வியைப் பற்றியே நினைந்து கொண்டு இருந்தால், கிட்டத்தட்ட முற்றிய அலித்தன்மை உண்டாகிறது. மேலே விளக்கியது காதல் மணங்களைப் பற்றியதாகும். (இது குறித்துத்தானோ கழகக்காலச் சான்றோர் மணமகனுக்குப் பரத்தையர் பிரிவு என்பதை ஏற்படுத்தினரோ!)

பணத்திற்காகவோ, அல்லது பதவிக்காகவோ ஏற்படும் கட்டாய மணங்களில், மணமகன், மணப்பெண்ணை வெறுத்தாலோ, அல்லது அப்பெண்ணின் மேல் அருவருப்புக் கொண்டாலோ, பெண்ணானால் போதும் என்ற காமவெறி பிடித்தவனைத் தவிர, மற்றவர்களுக்கு, அலித்தன்மை உண்டாகலாம். ஒன்றிய வாழ்வு நடாத்திய முதல் மனைவி மறைந்து இரண்டாம் மனைவியை மணந்தாலும் முதல் மனைவியிடம் வெளித்தோன்றிய ஆண்மை, இப் புது மனைவியிடம் தோன்றுவதில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல, பழைய மனைவி மேல் இருந்த அன்பு, இப் புது மனைவிமேல் ஏற்பட்டு, இருவருக்குள்ளும் நெருங்கிய தொடர்பு உண்டாகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் சிறிய, தகுந்த விளக்கங்கள், அவர்களுக்குள் பெரிய ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. (தொடரும்)

—என்ற பாட்டை ஓர்க. காலை எழுந்ததும் வாயைத் தூய்மை செய்து பச்சை இஞ்சியை ஒரு புளியங்கொட்டை அளவு உண்டு ஒரு குவளை தண்ணீரோ வெந்நீரோ அருந்துக. அரை மணிக்குப் பின் காலையுணவு கொள்க. இதனுடன் வெள்ளைப்பூண்டின் ஒரு பல்லோ இரு பல்லோ சேர்த்து உண்ணலாம். பகல் உணவுக்கு அரை மணி முன் அதே அளவு சுக்கை மென்று தின்றோ, அரைக் கரண்டி சுக்குத் தூளை வாயில் போட்டோ ஒரு குவளை நீரோ, வெந்நீரோ அருந்துக. மாலை 6 மணியளவில் ஒரு சிறிய பிஞ்சுக் கடுக்காய் ஒரு அவரைக் கொட்டை அளவு நன்றாய் மென்று தின்று தண்ணீரோ வெந்நீரோ அருந்துக. இப்படி வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து உண்டுவர உடலில் எந்த நோயும் வராது. முழு உடல் நலத்துடனும் இருக்கலாம். உடல் சூடேறினால் ஆவின்பால் அருந்துக.

- கொத்துமல்லியும் இஞ்சியும் சேர்ந்த துவையல் பித்தப் பையையும் கல்லீரலையும் சமநிலையில் இயங்க வைக்கும்.
- கறிவேப்பிலை பித்தத்தை அடக்கி, உடல் வெப்பத்தைத் தணிக்கும்.
- அரத்திப் (Apple) பழத்தை விட, பேரீச்சங்காய் அல்லது தூய்மையான பேரீச்சம்பழங்கள் பத்தைக் கொட்டை நீக்கி ஆவின்பால் அல்லது நீரில் வேக வைத்து உண்டு அந்தப் பாலையோ நீரையோ இரவு படுக்கு முன் உண்டுவர, ஒளிநீர் கட்டுப்படும்; உடல் உரம் பெறும். தசைகள் இறுகும். உடலில் ஒளி உண்டாகும்.
- தொண்டையில் சதை (Tonsil) அல்லது புற்று வளர்ந்திருந்தால், இருபது இருபது தும்பைப் பூக்களையும் அவற்றுடன் மூன்று மூன்று தும்பை இலைகளையும் காலை மாலை உண்டுவர, தொண்டைச் சதையும் புற்றும் கரையும். வேறு மருந்தோ அறுவையோ தேவையில்லை.
- உணவில் எண்ணெயை எவ்வளவுக் கெவ்வளவு குறைத்து உண்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு உடல் நலமாகவும் நோயின்றியும் இருக்கும். எண்ணெயை அளவுக்கு மீறி உணவில் சேர்ப்பதால் உடலின் கொழுப்புச்சாரம் (Cholesterol) மிகுந்து, குருதியில் பரவிக் கல்லீரல், மண்ணீரல் முதலியஉறுப்புகளைத் தாக்கி, அவற்றின் இயக்கத்தைக் கெடுக்கும்.
- முகந் தவிர உடல் முழுதும் மெல்லிய போர்வையால் மூடி உறங்குவதால் தோள்கள் வலிமை பெறும். குளிர், பனி, வெப்பத்தால் உடல் தாக்குறாது.

**உடல் நலத்திற்கென மருத்துவரிடம் செல்லாதீர்கள்!**

# "நாங்கள் யார்?"

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன்.


பல்லாண்டுகளாய் வேலை வாய்ப்பு அலுவலகத்தின்
அஞ்சல் அட்டைக்கு அருந்தவம் கிடக்கும்
இக்கால முனிவர்கள்! —அரசின்
எக்களிப்பைப் பார்த்து ஏமாற்றம் அடைந்து
வக்கற்று வழியற்று வாடும் தேனீக்கள்!
ஒப்போலையை உலுத்தர்க்கு வழங்கிவிட்டு
உருப்படாது போன அவல நாடக
அருந்தமிழ்க் காட்சிகள்!
இரக்கமற்ற இழிநெஞ்சரிடம் போய்
இரந்து வெறுமை அடைந்துளம்
நொந்து சாகின்ற இரவலர் கூட்டங்கள்!
கரவு அரசியலாரின் கைக்கேற்றபடி
உருண்ட சூதாட்டக் காய்கள்!
உலக உருண்டையில் ஓடித் தேய்ந்தும் தேயா
ஒண்மணி முத்துகள்!
காலத்தின் கையில் சிக்கித் தவிக்கும்
கவின்மிகு அறிவுக் களஞ்சியங்கள்!
அரசியற் காளான்களின் காட்டுவிலங்காண்டிச்
செயலுக்கு இரையாய் ஆன கருத்தோவியங்கள்!
தந்நலப் பேய்களின் தாண்டவத்தாலே
மண்மூடிப் போகின்ற
இலெமூரியா கண்ட இன்றமிழ்ப் பாவைகள்!
குருடன் கையிற் கிடைத்த குறிஞ்சிச் செல்வங்கள்!
பகைவன் கைக்குக் கிடைத்த பழந்தமிழ் நூல்கள்!
மூடவன் அறையில் கிடக்கும் மருதயாழ்கள்!
செவிடன் செவியில் ஒலிக்கின்ற செந்தமிழ்ப்பாக்கள்!
கோட்டை வாயிலை எண்ணற்றமுறை மடல்வழி
மிதித்து மனக்குறை உரைத்த மாந்தர்கள்!
ஊமையன் கனவு நாடகக் காட்சியில்
வந்து போகும் நாடக மாந்தர்கள்!
நாங்கள்தாம் தமிழ், ஆங்கிலம், வரலாறு,
நிலவியல், அறிவியல், கணக்கு ஆகியவற்றில்
பட்டம்பெற்றுப் பணிப்பயிற்சியும் பெற்றுப்
பணியில்லாதிருக்கும் பட்டந்தாங்கிகள்!

# உலகத் தமிழர் செய்திகள்

- வங்கக் கடலிலுள்ள அந்தமான், நிக்கோபார் என்னும் பெயரால் அழைக்கப்பெறும் தீவுத் தொகுதியில் மொத்தம் 321 சின்னஞ் சிறு தீவுகள் உண்டு. இவற்றில் 38 தீவுகளில்தாம் இன்று மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இஃது அந்தமான், நிக்கோபார் என்னும் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் தலைநகர் போர்ட்பிளேயர். இத்தீவு கி. பி 1050-இல் இராசேந்திர சோழனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.
- பிசித் தீவில் வட இந்திய மக்களே மிகுதியாக வாழ்கின்றனர். தமிழர்கள் குறைவே. இங்குள்ள தமிழர்களுக்குத் தமிழ் படிக்க வாய்ப்பில்லை. நூல்களும் கிடைப்பதில்லை. பிறமொழிகளுக்கு, குறிப்பாக இந்தி பயில்வதற்கு எல்லா வாய்ப்புகளும் உண்டு.
- இந்தியாவில் ஏறத்தாழ 1650 மொழிகள் பேசப் பெறுகின்றன.
- ஆத்திரேலியாவில் ஏறத்தாழ 500 தமிழ்க் குடும்பங்கள் வாழ்வ தாகவும், அவர்கள் தமிழர்களின் கலை, பண்பாடு இவற்றைக் கட்டிக் காக்கத் தனியே ஒரு தமிழ்க் கழகத்தை நிறுவிப் பாடு பட்டு வருவதாகவும் மொரீசியசு தீவிலிருந்து வெளிவரும் **மித்திரன்** என்னும் தமிழ் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.
- இலங்கையில் 35 இலக்கம், மலேயா சிங்கையில் $6\frac{1}{2}$ இலக்கம், பர்மாவில் (1966 கணக்குப்படி) 2 இலக்கம், பிசித் தீவில் 25000, மொரீசியசுத் தீவில் 45000, மார்ட்டினிக்கில் 14000 தமிழர்கள் வாழ்கின்றனர்.
- குமரிக் கண்டத்திலிருந்த பழந்தமிழ் நாடுகள் : ஏழ்தெங்க நாடு, ஏழ்மதுரை நாடு, ஏழ்முன்பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ் குன்றநாடு, ஏழ்குணகாரை நாடு, ஏழ்குறும்பனை நாடு, குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடு ஆகியவை. இவற்றின் அழிவை முல்லைக்கலி 104; புறம் 6-9, சிலப்பதிகாரம் 11-8, 20 ஆகிய இலக்கியச் சான்றுகளில் காணலாம்.
- தமிழர் மாந்த நாகரிகத் தொடக்கக் காலத்தில் நெருப்பு உண் டாக்கத் தீக்கடை கோல்களைப் பயன்படுத்தினர். இச்செய்தி யைக் கீழ்வரும் சான்றுகளில் பார்க்கலாம்.

  'இல்லறைச் செரீஇய ஞெலிகோல்' —புறம்: 315.
  'தாண்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்' —புறம்: 150.
  'கானவர் பொத்திய ஞெலிதீ' —புறம்: 247.
  'புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
  கல்லா விடையன்' —புறம்: 331.
  'ஞெலிகோற் கொண்ட
  பெருவிறன் ஞெகிழிச் செந்தீ' —பெரும்பாண்: 325-6.

  (ஞெலிகோல்—தீக்கடைகோல்). மற்றும் பெரும்பாணாற்றுப் படை 178; நற்றிணை 142-3; அகநானூறு 169-5 முதலிய சான்று களைக் கண்டு கொள்க.



## மங்கலத்திரு அருளி - தேன்மொழியர் திருமண நிகழ்ச்சி

கடந்த சுறவம் கய (24-1-80)-ஆம் பக்கல், திருத்தணிகை தோட்டக்கார மடத்தில், ஆசிரியர் **பெருஞ்சித்திரனார், தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களின் இரண்டாம் மகள், செல்வி **தேன்மொழி** அறி. இ.-க்கும், புதுவை தமிழூர் (திலாசுப்பேட்டை) **தேவராய பழனிச்சாமி, பார்வதி பழனிச்சாமி** அவர்களின் மகன், செல்வன் **ப. அருளி** வணி. இ; ச. இ-க்கும், தமிழ்மரபுத் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமணத் தொடக்கத்தில் திரு. **கதிர். தமிழ்வாணன்** அவர்கள் மணவிழாத் தமிழிசைப் பண் பாடினார். மணமகளின் பெற்றோர் மாலைகளையும் மங்கல நாணையும் வழங்க மணமகன் மணமகட்கு மாலையணிவித்து மங்கல நாண் பூட்டினார். மணமக்களை வாழ்த்தி திருவாளர்கள் **வேலா அரசமாணிக்கனார், பேரா. சதாசிவம்,** புலவர் **இறைக்குருவனார்**, தென்மொழி **மறை. நித்தலின்பனார், அரு. கோபாலன், தென்மொழி முத்துக்குமரனார், தென்மொழி துரையரசனார்** இறை பொற்கொடி முதலிய பலர் வாழ்த்தினர். தமிழறிஞர் பலரிடமிருந்தும் தென்மொழியன்பர்களிடமிருந்தும் வாழ்த்துகள் பல வந்தன. அவற்றுள் மொழிஞாயிறு **தேவநேயப் பாவாணர்** விடுத்த வாழ்த்து கீழ்வருமாறு:

தெருளுறு கல்வியோடு திருவருள் பாங்காய் நிற்ப
**அருளிதேன் மொழியர்** ஒன்றி அன்பினால் இன்பம் பொங்கிப்
பொருளெனத் தமிழின் தூய்மை போற்றியீ ரறிஞர்ப் பெற்றே
உருளுறும் உலக றத்தின் உரம்பெற நீடு வாழி.

---

## அன்பர்கள் கவனத்திற்கு

இவ்விதழில் வெளிவந்துள்ள **மருத்துவக் குறிப்புகள், ஆரிய வேத-புராண அழிம்புகளும் இழிவுகளும், உலகத் தமிழர் செய்திகள்** ஆகிய பகுதிகளுக்கு அன்பர்கள் சிறந்த நூல்களிலிருந்து தாங்கள் திரட்டி வைத்துள்ள குறிப்புகளை அனுப்பி வைக்கலாம். தகுதியானவை வெளியிடப் பெறும். —**அமைச்சர்**

# அறிவே

—கு. இராசேந்திரன், க. மு.

விரும்பியதை யெல்லாம் செய்யத் துடிக்கும்
அரும்புகின்ற இளமைக்கு அணைபோடும் அறிவே! நீ
திரும்புகின்ற திசையெல்லாம் தீனியைத் தேடு!
பருப்பொருளின் புறநிலையில் பதுங்கிவிடும் புலன்களைக்
கருப்பொருளை நாடும் உனக்குத் துணையாக ஆக்கிக்கொள்!
உன்னோடு ஒத்துப்-போகத் தெரியாத தொழிலாளப் புலன்களுக்கு
என்னோடு எப்படியாவது ஒத்துவா என்று இரண்டொரு
எலும்புத் துண்டுகளையாவது போட்டு இணைத்துக்கொள்!
ஒளியாகவும் ஒளியின் சுடராகவும் நீயிருந்தாலும் உனக்குத்
திரியாக இருப்பவை புலன்கள்தாம்!
கரம்புநிலத்தில் ஏருழுவதற்காக வந்திருக்கும் அறிவு உழவனே!
உனக்குப் பழக்கப்படாத முரட்டுக் காளைகளையே புலன்களாக
உன்னுடைய தலைவன் உன்க்குக் கொடுத்திருக்கின்றான்!
முரட்டுக் காளைகளைக் கொடுத்ததற்காக நீ தலைவனிடம்
சினக்காதே!
என்பதே உன் தலைவனின் உள்நோக்கமாக இருத்தல் வேண்டும்!
காளைகளைப் பக்குவப்படுத்துவதன் மூலம் நீயும் பக்குவப்
படவேண்டும்!
எனவே காளைகளைக் கட்டுப்படுத்தித் தட்டிக்கொடுத்துப்
பழக்கப்படுத்த முயற்சிசெய்!
சில வேளைகளில் தார்க்குச்சியையும் பயன்படுத்திக்கொள்!
ஏ அறிவே நீ!
கடைசிவரை காளைமாடுகளைப் பழக்கப்படுத்துவதில் மட்டுமே
காலத்தை வீணடித்துக் கொண்டிருந்து விடாதே!
காளை மாடுகளுக்கு அகவை முதிர்வதற்குள் அதன்
ஆட்டம் அடங்குவதற்குள்
உழவை நல்லமுறையில் செய்துவிடு!
ஏ அறிவே!
நீ நல்லமுறையில் உழுதவயல்களில் வித்திடும்வேலை
உனக்கு வேண்டா! உன் தலைவனே அவ்வயலைத்
தனதாக்கிக் கொள்வான்!
பேராசைக்-காரனென்று அவனிடம் அப்பொழுதும் சினக்காதே!
ஏனென்றால் அவனுடைய வயலும் உன்னுடைய வயலும்
ஒன்றாகவே ஆகிவிட்டது! உங்களுக்குள் வேற்றுமையே இல்லை.

---

## அன்பர்கள் கவனிக்க.

**பொறுப்பாசிரியர்** அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில், மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக்கொண்டு வர வேண்டுகிறோம்.

—**அமைச்சர்**

தொடர்-1

# ஆரிய வேத, புராணங்களின் அழிம்புகளும் இழிவுகளும்!

(ஆய்வு நூல்கள் பலவற்றினின்றும் திரட்டப்பெறும் தொகுப்பு)

o இருக்கு வேதத்தில் சிறப்பாய்க் கூறப் பெறும் இயற்கைக் கூறுகளான விசும்பு (ஆகாயம்), கதிரவன், விடிவெள்ளி, மாலை வெள்ளிகள், மழை, கார்மேகம், காற்று, நெருப்பு, மது முதலிய பொருள்களே, யசுர் வேதத்தில் முறையே வருணன், சூரியன், அசுவினிகள், இந்திரன், உருத்திரன், மாருதர், அக்கினி, சோமன் என்ற கடவுள்களாக உருவகிக்கப் பெற்றுள்ளன.

o யசுர் வேதத்திலேயே பிறவி வேறுபாடுகள், சாதிப் பாகுபாடுகள் பற்றி விரிவான குறிப்புகள் உள்ளன. 'யாகங்'கள் செய்கின்ற முறைகளும், கொலை வேள்விகளைப் பற்றியும் யசுர் வேதத்தில் மிகவும் விளக்கமாகக் குறிக்கப் பெறுகின்றன.

o சாம வேதம் என்பது யசுர் வேதச் சொலவகங்களை (சுலோகங்களை) இசைப் பாடல்களாக்கிய நூலே. அசுரர்களைக் கொல்லுதற்கே சாம வேதம் பாடப்பட வேண்டும் என்று யசுர் கூறுகிறது.

o அதர்வ வேதம் மாய மந்திர தந்திரங்களைப் பற்றியது. மூட நம்பிக்கைகள் இதில் மலிந்துள்ளன. சாவங்கள் கூறப் பெறுபெறுகின்றன. 'ஓ' குசைப்புல்லே 'ஓ' இரத்தினமே என்னுடன் பகைக்கும் எல்லாரையும் அழியச் செய்க' என்பது அதில் உள்ள ஒரு மந்திரம்.

o வேதகாலச் சமயம் தீ வழிபாடே. அதைப் பிற்காலப் பிராமணர்கள் வேள்வியாக மாற்றி விட்டனர். அக்காலத்தில் கோயில்களோ உருவ வழிபாடோ இல்லை.

o ஒரு பிராமணனைப் பாராட்டுவதால் என்னென்ன பயன்கள் விளையும் என்று இருக்கு வேதத்தில் கூறப்பெற்றுள்ளது.

o ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தது கி. மு. 2000 போல், அகத்தியர் தென்னாடு வந்தது கி. மு. 1500 போல், என்பர் ஆராய்ச்சியாளர். அவ்வாறிருக்க, இந்து மதமும் வேதங்களும் **'அநாதி'** (முதலற்றன) என்றும், **'அபௌருஷேயம்'** (மக்களால் படைக்கப்படாதன) என்றும் கூறப் பெற்று வருகின்றன. ஆரியர்கள் இந்தியாவிற்கு வரும்பொழுது அவர்களுக்குச்

செவிவழித் தெரிந்திருந்த சொலவகங்களே வந்த பின் இருக்கு வேதமாகத் தொகுக்கப்பெற்றது. அதன் பின்னரே, அதனின்று படிப்படியாக யசுர், சாம, அதர்வ வேதங்கள் உருவாக்கப் பெற்றன. இது வரலாறு. இதனை அடியோடு மாற்றியுரைப்பது இந்து மதத்திற்கும் வேதங்களுக்கும் பெருமை சாற்றவே.

o ஆரிய நூல்களில் சொல்லப் பெற்ற **'விதி'** என்னும் சொல் வேறு. திருக்குறளில் குறிக்கப்பெற்ற **'ஊழ்'** என்னும் சொல் வேறு. வேதத்தில் ஏற்படுத்தப் பெற்ற வருணச்ரம முறைப்படி நடப்பதையே ஆரிய நூல்கள் 'விதி' என்கின்றன.

வேதமென்னும் சொல்லடியாகப் பிறந்த சொல்லே விதி என்னுஞ் சொல். **வேதம்** என்னும் சொல்லுக்கு 'விழி' என்னும் தமிழ்ச் சொல்லே மூலச் சொல்.

விழித்தல் – பார்த்தல்-–அறிதல் அறிவு.
விழி—வித் - வேதம்—விதி.

'அவனவன் விதிப்படி நடக்க வேண்டும்' என்னும் உலக வழக்குக்கு 'அவனவன் வருணத்திற்கென வேதம் என்ன முறை வகுத்திருக்கிறதோ அதன்படி நடக்க வேண்டும்' என்பதே பொருள்.

**விதித்ருஷ்டோய இஜ்யதே ஸாத்விக : ll —கீதை 17-11**

இதன் பொருள் : வேத நெறிப்படி செய்வது உயர்ந்தது.

---

## மாவை-சேனாதிராசா-செல்வி பவானி வாழ்க

தமிழீழத் தமிழர் விடுதலைக் கூட்டணியின், தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. **மாவை-சேனாதிராசா**வுக்கும், செல்வி **பவானிக்கும்,** மாவிட்டபுரத்திலுள்ள மணமகள் இல்லத்தில் 6-2-80 அறிவன் மாலை 5-30 மணியளவில், தமிழீழத் தமிழர் தலைவர் திரு. **அ. அமிர்தலிங்கம்** தலைமையில் தமிழ் மரபுப்படி திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் ஈழத்தில் பல பகுதிகளிலிருந்தும், இளைஞர் பேரவை உறுப்பினர்களும், கூட்டணி முகாமையர்களும் ஆதரவாளர்களும் இத்திருமணத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெற்று இனிதே வாழவும் தமிழீழப் பொதுவுடைமைக் குடியரசை நிறுவுவதற்குப் பாடுபடவும் **தென்மொழி** நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

# மக்களவை

## ம : 245: சென்னை வானொலி நிலையம்

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைப் பெருநகரின்கண் அமையப்பெற்ற "ஆல் இந்திய ரேடியோ, சென்னை வானொலி நிலையம்" தமிழ்நாட்டின் தவப்பேற்றால்(!) அமையப்பெற்றதென்றால் அது மிகையாகாது. முழுக்க முழுக்க தமிழர் வரிப்பணத்தில் நடத்துவதாலும், மஞ்சள் பார்ப்பனர்களின் கைப்பாவையாக இருப்பதாலும், தமிழ், தமிழர்களின் மாண்பினை உலகின் கண்களுக்குப் படம் பிடித்துக் காட்டும் பெருமை இதற்கே உண்டு என்று துணிந்து கூறலாம். (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுக் கழகம், தமிழ்ப்பணி ஒன்று, இரண்டு, தமிழ் ஆசியப்பணி மலேசிய, சிங்கப்பூர், பிரிட்டிசு ஒலிபரப்புக் கழகம் (BBC) மற்ற உலக நாடுகள் அனைத்தும் தமிழை ஒலிபரப்பினாலும் தகுதியற்றனவே!)

இனி அதன் நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். காலை 5-55-க்கு 'வந்தே மாதரம்'. வங்க மொழியில் பாடப் பெற்ற மந்திரம்; தேசிய கீதம் போன்றது. மொழி பெயர்த்துச் சொன்னாலொழிய பொருள் எந்த மரமண்டைக்கும் தெரியாது. தெரிந்தவர்கள் போல் நடிக்கும் திறன் தமிழ்நாட்டுச் செம்மறியாட்டுக் கூட்டங்களுக்குக் கைவந்த கலை. இஃது அம்மாமிகளிடம் கற்ற பாடம். அடுத்தது 'ஆல் இந்திய ரேடியோ" சென்னை வானொலி நிலையம்' என்று சொல்லிச் 'சக ஆண்டு 1909, சித்தார்த்தி, தை மாதம்' என்று முடிப்பார்கள். மங்கள இசைக்குப் பின்னர் இராமநாதசுவாமி சுப்ரபாதத்தை M. S. சுப்புலட்சுமி படிப்பார்கள். அதன் பின்னர் சூலமங்கலம் 'சகோதரிகளின்' 'லஷ்மி துர்க்காதேவி' பாட்டு. அதன் பின்னர் "கோவிந்தநாம சங்கீத கீர்த்தனம்". "நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தைப் பற்றிய, அன்னங்காச்சாரியின் விமரிசனங்கள்" நடைபெறும்.

தமிழ் மறவர்கள் வாழும் தமிழ்நாடாயிற்றே! தமிழே உயிர் மூச்சென வாழ்கின்றவர்கள் நாடாயிற்றே! அட, தமிழர்களின் வரிப் பணத்தில் வயிற்றுப் பிழைப்பு நடத்தும் நன்றிக்கடனுக்காவது நிலையம் செயல்படத் துவங்கு முன்னர், "வணக்கம்" "வெல்க தமிழ்", "தமிழ்மொழி வாழ்த்து" (வந்தே மாதரத்துக்குப் பகரமாக) திருவள்ளுவராண்டு(அ) பெரியாராண்டு, தமிழ்த்திங்களின் பெயர், நாட்கள் எல்லாம் சொல்வார்கள் என்று எதிர்பார்த்து ஏமாறுவது தான் மிச்சம். தமிழர்கள் அரசுக் கட்டிலில் அமர்ந்து பதின்மூன்றாண்டுகள் ஆகியும், பிராமணியத்தையும், பார்ப்பனர்களின் வல்லாண்மையையும், அசைக்க முடியாத அவலநிலைதான் தமிழர்கள் வாழும் நாட்டில் தொடர்ந்து நிலவி வருகிறது.

தொடர்ந்து நடுப்பகல் ஒலிபரப்பில் குன்னக்குடியாரின் 'வயலின்' இசை, "டாக்டர் பால முரளியாரின்" பாவிசை (பஜனை), பித்துக் குளியாரின் பிதற்றல்கள், "ஸ்ரீ சௌரிராஜரின்" 'ஸுப்ரபாதம்", வேதாரண்யம் (திருமறைக்காடு) 'எம். கனகாம்புஜத்தின் 'புளூட்', பாலக்காடு கிருஷ்ணனின் 'மிருதங்கம்', கோழிக்கோடு கோபால கிருஷ்ணனின் கடம், 'பந்தநல்லூர் சகோதரிகளின்' 'நாகஸ்வரம்' காரைக்குடி எம். எஸ். மணியின் 'க்ளாரினெட்' இசை. மீண்டும் பிற்பகலில் 'ஆகாசவாணி'யின் செய்திக்குப் பின்னர் 'கிரிகெட் டெஸ்ட்டின் கமண்ட்ரிகள்', 'ஸ்பாட்லைட்டுகள்' 'வெஸ்டர்ன் மியூசிக்குகள்', 'வாத்திய இசை', 'வாத்திய கோஷ்டி' இன்னும் 'ஸ்ரீரங்கம்' திருவையாறு, கும்பகோணத்துப் பட்டாச்சாரியார்கள், 'சாஸ்திரிகள்', 'ஜீயர்'களின் 'பாகவதம்' இராமாயண' டிஸ்கோர்சுகள்' நடைபெற்ற பின்னர், 'தக்ஷிண பாரத் சங்கீத் சபாவின் பாடல்கள் (எல்லா நிலையங்களிலும் ஒரே நேரத்தில் ஒலிபரப்பாகும்). இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழைப் பற்றியோ, தமிழ்நாட்டைப் பற்றியோ, தமிழினத் தலைவர்களைப் பற்றியோ (அ) தமிழர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளைப் பற்றியோ செய்திகள் என்றுமே இடம் பெற்றதில்லை. பெறப் போவதும் இல்லை. இதுதான் **தமிழ் நாடு;** இவன்தான் தமிழன்.

இனி, திருச்சி வானொலி நிலையம் காலையில் 'பக்திரஞ்சனி'யில் 'பஜகோவிந்தம்'. சூலமங்கலம் சகோதரிகளின் '**நவக்ர**ஹ அஞ்சலி', பி. ராஜமய்யரின் '**நவக்ரஹ ஸ்தோத்ரம்**', '**ஸ்ரீ** சாரதாதேவி சுப்ரபாதம்', '**ஸ்ரீ** வெங்கடேச சுப்ரபாதம்', 'பி. வி. அனந்தசயனம்' குழுவினர் பாடுவார்கள். 'எம். எல். வி.யின் துர்காதேவி சரணங்கள் முடிந்த பின்பு 'சேவைச் செய்திகள்' என்ற தலைப்பில். சமயபுரம் கருமாரியின் தேரோட்டங்கள், கும்பாபிஷேகங்கள்' (குடமுழுக்கு), திருவானைக்காவல் அன்னை அபிராமியின் 'சகஸ்ர நாம அருச்சனைகள், 'ஸ்ரீரங்கம்' கோவிலில் நடைபெறும் 'பாகவத டிஸ்கோர்சுகள்', இராமநாதபுரம் சேதுபதி இடைநிலைப் பள்ளியில் ஆசார்யாள் தலைமையில் நடைபெறும் திருப்பாவை, திருவெம்பாவை கட்டுரைப் போட்டிகள், சிருங்கேரி ஆசார்யாளின் அருளுரைகள், காரைக்குடி கம்பன் விழா, 'அகில பாரத ஐயப்ப சேவா சமிதியின் ஆயிரம் விளக்கு, மகரவிளக்கு சங்கராந்திகள். மதுரை கிழக்கு மாசி வீதியில் 'டாக்டர்' பாலமுரளியாரின் 'வயலின்' இசைகள், விருதுநகர் இந்து நாடார் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும் இந்து சமயச் சொற்பொழிவுகள் அனைத்தும் 'சேவைச்' செய்திகளாம். திருவையாறு சனிப்பெயர்ச்சி விழா, தியாகராசனின் நூற்றாண்டு விழாவை யொட்டி அவனது கல்லறையில் ஆரியக்குளுவான்களால் 'புகழாரம்' செய்யப்பட்ட செய்திகள். சமயபுரம் கருமாரியின் குடமுழுக்கு போன்ற நிகழ்ச்சிகளை வண்ணிக்க மூன்று நாட்களைப் பாழ் செய்தார்கள்! அடிகளாருக்கும், அண்ணாவுக்கும், பெரியாருக்

கும் எந்தப் பார்ப்பனனும் விழா எடுத்ததில்லை. தியாகராசனுக்கும் இராசாசிக்கும், ரமணனுக்கும் சேசாதிரிக்கும் விழா வெடுப்பது சூத்திரத் தமிழன்தான்! மானங்கெட்ட பயல்கள்! இங்கேயும் எங்கேயும் தமிழர் நலன்களுக்கு இருட்டடைப்பு. அவ்வை நடராசனாரின் அகத்திணையைப் பற்றிய சொற்பெருக்கோ, செல்லப்பனின் அருள் நெறியோ, சண்முகசுந்தரத்தின் சான்றோர் வாக்கோ, பாலசுப்பர மணியத்தின் குறள்நெறியோ, வ. சுப. மாணிக்கத்தின் தமிழ் மணமோ எதையுமே கேட்க முடியாது. இங்கு வாழ்பவர்கள் தமிழினப் பகைவர்கள்; கேடர்கள்; புல்லுருவிகள். அவர்களின் உடலில் ஓடுவது தமிழ் அரத்தமன்று! ஆரிய நஞ்சு கலக்கப்பட்ட கூவமாற்றின் தண்ணீர்! இதுதான் தமிழர்களின் நிலை; 'ஜாதி இந்துக்களின்' நிலை; பாலையும், தேனையும் தலையில் வாங்கிக் கொண்டு, பார்ப்பான் வடமொழியில் திட்டுவதைக் கேட்பது இங்குள்ள கற்களின் நிலை. குற்றேவல் புரிவதும், காவடி தூக்குவதும், பொன்னும் பொருளும் வாரிக் கொடுப்பதும் பணக்காரர்களின் நிலை; தமிழைக் காட்டிக் கொடுத்து வயிறு பிழைப்பது அறிஞர்களின் நிலை! தமிழ்நாட்டை ஆரியத்திடம் அடகு வைப்பது அரசியல் எத்தர்களின் நிலை! கிடைத்த வரையில் சுருட்டுவது பார்ப்பனர் களின் நிலை! பொய்யான போலியான நாகரிகத்தில் மூழ்கிக் கெட்டொழிவது பெண்களின் நிலை. இந்நிலைகளால் தமிழை எங்கும் காண முடியாது. மாருகச் சிதைந்து வருவது உறுதி! இத்தகைய தமிழர்களின் இளித்தவாய்த்தனத்தினால் வானொலி தொலைக்காட்சி. வைப்பகங்கள், அஞ்சல் ஆயவழித் துறைகள், நடுவண், மாநிலச் செயலகங்கள், அரசின் பிற துறைகளனைத்தும் பார்ப்பனர்களின் பாசறையாக விளங்குகின்றன. ஆனால் தமிழனின் அடிவருடி, குற்றேவல், ஐந்தாம்படை வேலைகளும், மலம் அள்ளுதல், செருப்புத் தைத்தல், மீன்பிடித்தல், கல் உடைத்தல், 'ரிக்சா' இழுத்தல் போன்ற வேலைகளைச் செய்கிறான். வறுமையில் தோய்ந்து மாய்கிறான்.

கலைமகளும் திருமகளும் வாழ்கின்ற இத் திருநாட்டில் ஐம்பது கோடி பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். இதில் பல கோடி பேர்கள் குந்துவதற்கும் குடிசை இல்லாமல் நாயினும் கேடாக வாழ்கிறார்கள். நாள்தோறும் நூற்றுக்கணக்கான பட்டினிச் சாவுகள். ஆயிரக்கணக்கான கொலை கொள்ளை, கற்பழிப்புகள்! எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எழுபது விழுக்காட்டினர். ஆச்சார்யார்களின் அருளும், இறையருளும் நிறைந்த இந்நாட்டில் ஏனிந்தக் கையேந்தும் நிலை? 'பஜகோவிந்தமும்' 'சுப்ரபாதமும்' பசியைப் போக்கிவிடுமா? இராம ஐய்யப்ப குழுப் பாக்கள் (பஜனை) அறியாமையை ஒழித்து விடுமா? இறையருளும் இந்து மதமும் மாந்தனைச் சமநிலைப்படுத்துமா? குழலிசையும், கம்பியிசையும் வறுமையை ஒழிக்குமா? 'கிரிக்கெட் காமண்ட்ரியும்'

'ஸ்பாட் லேட்டும்' பாலேயும் தேனையும் ஆறுக ஓடச் செய்யுமா' கிழக்கு வங்கத்தில் இலக்கக்கணக்கான பேர்களைக் கற்பழித்துக் கொன்று குவித்தார்கள். ஈழத்தில் தமிழினத்தைக் கொன்று குவித்தார்கள். திருக்கோயில்களை உடைத்தார்கள். கல்லாலான கடவுளர்கள் கடலுக்கடியில் சென்றுர்கள். சிவபுரத்து நடவரசன் மேலைநாடு சென்றுன். அப்பொழுதெல்லாம் துணை நிற்காத இறையருள், தமிழர்களை ஒன்றுபடுத்தத் துணை நிற்குமா? எவ்வளவு எழுதியும், எடுத்துரைத்தும் விளங்கவில்லை என்றால் படித்துப் பட்டம் பெற்று என்ன பயன்? இட்லரின் **நச்சுக் காற்றறை போன்று** (Gas chamber) அல்லது துமுக்கிக் கொண்டு சுட்டுத்தள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களை ஒன்றுபடுத்த முடியும். தற்கொலைப் படையொன்றை அமைத்தல் வேண்டும். அதன் மூலம் பிரித்தாளும் பார்ப்பன ஆற்றலைத் தகர்த்தெறிதல் வேண்டும். அப்பொழுதுதான் சென்னை வானொலியில் தமிழர்களைப் பார்க்க முடியும்! தமிழைக் காப்பாற்ற முடியும்! சென்னை வானொலியை வைத்தே நம்முடைய கையாலாகாத் திறத்தை வடவர்கள் எடை போட்டுக் கைவரிசையைக் காட்டி வருகிறுர்கள். தமிழா உனக்கு என்றைக்குத்தான் விழிப்புணர்ச்சி வரப்போகிறது? எழுந்து நில்! உறைவாளுடன் விரைந்து புறப்படு களம் நோக்கி! முதலில் மொழி, இன விடுதலை, தமிழ்நாட்டு விடுதலை, பொருளியல் விடுதலை இம் மூன்றும் கிடைத்தாலொழிய வேறு வழியில்லை.

—**மேன்மகள் உலகநாதன்**, (வனிதா செகநாதன்)
திருவண்ணுமலை.

## பாவாணரின் அகர முதலி வெளிவருவதால் என்ன நன்மை?

**1.** தமிழ் வளர்ச்சி அடையும்; வடமொழிப் பிணிப்பினின்று மீளும்.

**2.** நூலாசிரியர்களுக்குச் சொற்கள் உதவும்; புதிய அறிவியல் இலக்கியம் பெருகும்.

**3.** சொல்லாராய்ச்சியாளர்களுக்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும் வழி காட்டும்.

**4.** மூன்று உலகக் கலைகள் வளர்ச்சி அடையும். அவையாவன:
- க. ஒப்பியன் மொழி நூல்.
- உ. உலக வரலாறு.
- ங. குமுகாயப் பண்பாட்டு மாந்தர் நூல்.

**5.** உலக ஒற்றுமைப்பாட்டிற்கு இது பேரளவு துணை செய்யும்.

**6.** இந்தித் திணிப்பு ஒழியும்.

**7.** திருக்கோயில் வழிபாடு தமிழில் நிகழும், தமிழன் அடிமைத்தனம் நீங்கும்.

(அடிப்படை: தமிழரசு (16-1-80) —**நா. எழில்-மகிழ்நன்**.

# அஞ்சல்துறை அலுவலரின் அரிய சொல்லாக்கங்கள்!

கடந்த 10-2-1980 ஆம் பக்கல் முதல் 16-2-80 வரை **அஞ்சல்துறை—கிழமை விழா**வாகக் கொண்டாடப் பெற்றது. அக்கிழமையில் **திண்டிவனம் தலைமை அஞ்சலக விழாக்** குழுவினர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை நம் பார்வைக்கு வந்தது. அதில் அத்துறையில் பணியாற்றி இன்று பொதுத் தொண்டுக்குச் சென்ற கீழ்க்காணும் நால்வரை நினைவு கூர்வதாகவும் அவர்கள் வழியிலே சில தமிழ்ச் சொற்களைப் படைத்துத் தமிழ்த் தாய்க்குப் படையல் செய்வதாகவும் அக்குழு அறிவித்திருந்தது.

நெடுங்கதைக்கு : **அகிலன்**

சிறுகதைக்கு : **அன்னம்**

தொழிற்சங்கப் பாராளுமன்றப் பணிக்கு } **இலக்குவனர்**

செந்தமிழ்க்கு : **பெருஞ்சித்திரனர்** (துரை-மாணிக்கம்)

அத்துடன் அவ்வறிக்கையில் இன்று வழங்கும் மாத்திரி (மீட்டர்) முறை அளவைச் சொற்களுக்கு ஏற்றவையாகப் பல பழந் தமிழ்ச் சொற்கள் கொடுக்கப் பெற்றிருந்தன. இச் சொல்லாக்கம் முற்ற முடிந்த முடிவாக இல்லாமற் போனாலும் இத்துறையில் மிக ஆழமாகச் சிந்தித்த அவர்களின் பெருமுயற்சி பெரிதும் பாராட்டற் குரியது. அவர்களை நாம் மனமாரப் போற்றுகிறோம். துறை தோறும் துறைதோறும் இம் முயற்சி நடைபெறுமானால் தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சிக்கு எத்துணை ஆக்கமும் ஊக்கமும் ஏற்படும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். இச் சொல்லாக்கங்களைச் செய்து தொகுத்தவர், திண்டிவனம் தலைமை அஞ்சலகத் தலைவர் திரு. **சி. இராம. பாண்டுரங்கன்** அவர்கள்.

## நீட்டலளவை

| | | | |
|---|---|---|---|
| 10 சிந்தடி (மில்லிமீட்டர்) | 1 குறளடி (செ. மீட்டர்) | 10 பனையடி (டெ. மீட்டர்) | 1 அம்படி ஹெ. மீட்டர்) |
| 1 குறளடி (செ. மீட்டர்) | 1 கதிரடி (டெசி மீட்டர்) | 10 அம்படி (ஹெ. மீட்டர்) | 1 நெடிலடி (கிலோ மீட்டர்) |
| 10 கதிரடி (டெசி மீட்டர்) | 1 சீரடி (1 மீட்டர்) | 10 நெடிலடி | 1 காதம் |
| 10 சீரடி (1 மீட்டர்) | 1 பனையடி (டெக். மீட்டர்) | 10 காதம் | 1 யோசனை |

## நிறுத்தலளவை

| | | | |
|---|---|---|---|
| 10 ஓம நிறை (மில்லிகிராம்) | 1 இதழ் நிறை (சென்டி கிராம்) | 10 கழஞ்சு (ஹெ. கிராம்) | 1 கனி நிறை (கிலோ கிராம்) |
| 10 இதழ் நிறை) (சென்டி கிராம்) | 1 பூ நிறை (டெசி கிராம்) | 10 கனி நிறை (கிலோ கிராம்) | 1 தூக்கு |
| 10 பூ நிறை (டெசி கிராம்) | 1 மணி நிறை (கிராம்) | 10 தூக்கு | 1 பரி நிறை (100 கி. கி.) |
| 10 மணி நிறை (கிராம்) | 1 மஞ்சாடி (டெ. கிராம்) | 10 பரி நிறை | 1 பொதி நிறை (1000 கி. கி.) |
| 10 மஞ்சாடி (டெ. கிராம்) | 1 கழஞ்சு (ஹெ. கிராம்) | 50 கனி நிறை | 1 ஐந்தூக்கு (அ) பரியறை |
| | | 25 கனி நிறை | 1 குண்டு |

## முகத்தலளவை

| | | | |
|---|---|---|---|
| 10 தூதை | 1 அகல் (சென்டி லிட்டர் | 10 கலம் (ஹெ. லி.) | 1 உறை (கிலோ லிட்டர்) |
| 10 அகல் (செ. லி.) | 1 ஆழாக்கு (டெசி லிட்டர்) | 200 தூதை (ML) | 1 உழக்கு |
| 10 ஆழாக்கு (டெசி லிட்டர்) | 1 நாழி (லிட்டர்) | 500 தூதை (ML) | 1 உரி |
| 10 நாழி (லிட்டர்) | 1 மரக்கால் (டெக். லிட்டர்) | 250 தூதை (ML) | 1 உரியறை |
| 10 மரக்கால் (டெ. லி.) | 1 கலம் (ஹெ. லிட்டர்) | | |

## பரப்பளவு

| | | | |
|---|---|---|---|
| 1 சதுர மீட்டர்) | 1 பனை இலை | 10 வளப்பு (1000 ச. மீ.) | 1 மா |
| 10 சதுர மீட்டர் (பனை இலை) | 1 படல் | 10 மா (10000 ச. மீ) | 1 வேலி |
| 10 படல் (100 ச. மீ.) | 1 வளப்பு | | |

## காலம்

| | | | |
|---|---|---|---|
| 60 நொடி (செகன்டு) | 1 மா நொடி (நிமிஷம்) | 60 மா நொடி | 1 மணி |
| | | 24 மணி | 1 நாள் |

## மருத்துவரிடம் கேளுங்கள்!

தென்மொழியில் வெளிவரும் **'ஆண்களுக்கான பாலியல் கோளாறுகள்''** என்னும் மருத்துவத் தொடர் கட்டுரையைப் படித்து வரும் அன்பர்கள் சிலர் சில ஐயங்களையும், மருத்துவ விளக்கங்களையும் கேட்டுத் தென்மொழிக்கு எழுதுகின்றனர். அத்தகையவர்கள் தாங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் விளக்கங்களை, 'மருத்துவர் **கோ. கோவிந்தனார் 36,** கோவிந்தன்சாலை, சென்னை-**600 033''** என்னும் முகவரியில் நேரிலோ மடல் வழியோ கேட்டுத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். — **அமைச்சர்.**

*0:747:* பெரு வணக்கத்திற்குரிய ஐயா, வணக்கம். ஆசிரிய உரை சிறப்பாக உள்ளது. இன்னும் சூடாக ஆசிரிய உரை இருக்கும் என எண்ணியிருந்தேன். பழைய தென்மொழிப் படிகளைப் பயின்று கொண்டிருக்கும் எனக்கு இவ்வாறே எண்ணத் தோன்றுகின்றது. நிற்க. கடலூரில் தங்களின் பொழிவினைக் கேட்ட என்னுடைய மூத்த நண்பர்கள் மிகவும் மகிழ்ந்தனர். எதிர்காலத் தமிழகத்திற்குத் தங்கள் வழியே சிறந்த வழியாகும் என்பதை உணர்ந்து மதித்தனர். **—கு. இராசேந்திரன்,** அண்ணாமலைநகர்.

*0:748:* பெருந்தகையீர்! சால வணக்கம். மடல் கிடைத்தது. உங்கள் நெஞ்சப் பாங்கினை அதில் புலப்படுத்தியிருந்தீர்கள். யாரையும் புண்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் பிழைகளை நான் சுட்டவில்லை. தமிழகத்தில் எழுச்சியுள்ள தமிழ் மறவர் படையொன்றை உருவாக்கி வரும் 'தென்மொழி' ஏடு, பிழையின்றி வர வேண்டுமென்பதே என் விருப்பம். நிறைகளைச் சுட்டுவோர் பலர். குறைகளைச் சுட்டுவோர் சிலரே. குறைகள் அகற்றப்பட்டால் நல்லதுதானே. உங்கள் அன்பையும் ஆற்றலையும் தமிழ்ப் புலமையினையும் எழுத்தாற்றல் பேச்சாற்றலையும் நான் அறியாதவனல்லேன். கழகக் காலப் புலவரொருவர் இருபதாம் நூற்றாண்டில் தோன்றி இருந்தமிழ் வளர்த்து வருதலைக் கண்டு பெருமைப்படுபவன் நான்.

சில தவறுகளைச் சரியென்று கருதியே செய்து வருகின்றோம். பழக்கத்தின் காரணமாக அவை படிந்து விடுகின்றன. மிகப் பெரிய தமிழ்ச் சான்றோர்களும் அவற்றுக்காளாகியுள்ளனர். நான் சுட்டியவற்றுள் பல, பிழைகளாக இல்லையெனக் குறிப்பிட்டுள்ளீர்கள். நேரில் வருங்கால் அவற்றைத் தெளிவுபடுத்தின் நான் திருத்திக் கொள்வேன்.

'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

கழகப் புலவனனைய ஒரு தண்டமிழ்ச் சான்றோனைத் தமிழகத்துக்குத் தந்த செந்தமிழ் மறவர் மறைந்த செய்தியறிந்து அதிர்ச்சியுற்றேன். 'கனிச்சாறு' வெளியீட்டு விழாவின் போது செம்மாந்த நிலையிலமர்ந்து, பெற்ற மகன் பெற்றெடுத்த தமிழ்க் குழவியாம் 'கனிச்சாறு' விழா நிகழ்ச்சியனைத்தையும் கண்டு களித்த தந்தையார் இத்துணை விரைவில் மறைவாரென யாரும் எதிர்பார்த்திலர். இயற்கையின் நெறியை எதிர்க்கவல்லார் யார்?

**—அ நக்கீரன், சென்னை-50.**

*0:749:* பேரன்புமிக்க பாவலரேறு அவர்களுக்கு, அன்பு வணக்கம். ஈரோடு, பாவலர் மன்றம் நடத்திய பட்டிமண்டபத்தில் நடுவராக இருந்து, இனம், மொழி, நாடு என்கின்ற மூன்றினுக்கும் முத்தான, கருத்தாழமிக்க சொற்பொழிவை மொழிந்ததைக் கேட்டு உணர்வுகள் உந்தப் பெற்றேன். நள்ளிரவாகியும் கூட்டம் கலையாத நிலையில் நல்லதொரு தீர்ப்புக்கு உருக்கொடுத்து முடித்த பாங்கு சிறப்பாய் இருந்தது. அதேபோல மறுநாள் பெரியார் மன்றத்தில் வேலா அறக்கட்டளையின் சார்பில் நடத்திய விழாவில் "திராவிடர்களின் இறைநிலை" என்னும் தலைப்பில் தேர்ந்த ஆராய்ச்சிக் குறிப்புகளோடு மிகப்பல அரிய விளக்கங்களை நேரம் குறைவாயிருந்தும் மேலான வகையில் கூறியது நல்ல பயனுள்ளதாய் இருந்தது.

இவை தவிர, தங்கும் விடுதியில் தாங்கள் பாவேந்தர் பாரதிதாசனோடு பழகிய காலத்து நிகழ்வுகளை நினைவுறுத்திக் கூறியது இன்னும் நெஞ்சை விட்டு நீங்காத நிலையில் உள்ளது. பாவேந்தரைப் பாராதும், பழகாதும் இருந்து வருகின்ற என் போன்ற இளைய தலைமுறையினர்க்கு அது பலவகைப் பட்டறிவுகளைத் தருவதாகவும் அமைந்திருந்தது. வெல்க தங்கள் தொண்டு! விளைக நலம்பல கொண்டு!

**—பனிமலைப்பதியன்**, ஈரோடு-7.

***0:750:*** செந்தமிழ் மொழி காக்கும் காவலரே, வணக்கம். சிறப்பும், வளமும் உடையது நம் நற்றமிழ் மொழி. இச் சீரிய மொழியில் பேசுவதற்கும், எழுதுவதற்கும், மிகவும் எளிய சொற்கள் இருக்கும்போது சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தார் செய்யும் "தமிழ்க் கொலையை" மொழி உணர்வுள்ள எந்தத் தமிழனாலும் பொறுத்துக் கொள்ள இயலாது. வானொலியில் செய்தி அறிவிப்பின் போது அறிவிப்பாளர் படிக்கும் செய்திகளில் மொழிக் கலப்படச் சொற்கள் இருப்பதை நீங்களே உணர இயலும். சான்றாக 'அரசு ஜெனரல் மருத்துவமனை" என்றும், தொலைக்காட்சிச் செய்தி அறிவிப்பில் "போலீசார் ஸ்தலத்திற்கு விரைந்தனர்" என்றும் படிக்கின்றனர். ஆரியக் கும்பலின் அனைத்தாளுமை இந்நிலையங்களில் இருக்கும் வரை தூய தமிழ்ச் சொற்களைக் கேட்பது அரிது. ஆகவே, இந்நிலை நீடிக்க விடாது இக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். **—கோ. வெற்றிச்செல்வன்,** (விசயகுமார்)அறி. இ;

சென்னை-1.

***0:751:*** தனித் தமிழ்க் காவல! தமிழினம் எழுச்சியுற வந்த பாவல! வணக்கம். கடந்த 17-2-80 ஞாயிறன்று ஈரோட்டில், ஓருலக அவையில் தமிழ் ஈழத்திற்கு முதற் குரல் எழுப்பிய இலண்டன், திரு. கிருட்டிண வைகுந்தவாசன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கூட்ட மேடையின் முன் பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்தவர்களோ பதின்மரே! ஒளிந்து நின்றவரையும், ஓரமாய் இருந்தோரையும் கணக்கிட்டால் முப்பதின்மரே தேறுவர்! கூட்ட அமைப்பாளர்களுக்குப் பெருத்த அவமானம். இனவெழுச்சித் தமிழ் மகனுக்கு உணர்ச்சிமிக்க வரவேற்பும், வாழ்த்தும் அளிக்க வேண்டிய,பெரியார் தோன்றிய ஈரோட்டில் கூட்டத்திற்குப் பஞ்சம். என்னவென்றுரைப்பது? யாது நினைப்பார் அப்பெருமகனார்? ஆனால் அன்று அனைத்துத் திரையரங்குகளிலும் 'இடமில்லை' என்ற பலகை மாட்டப்பட்டிருந்திருக்கும். இன்றைய 70 விழுக்காட்டுத் தமிழன் தன் மொழியையும், பண்பாட்டையும் பேணுவதை விட, நாகரீகம் என்ற பெயரால் அயன்மொழி மீதும், அயலார் பண்பாட்டிலும் அவனது நாட்டம் அதிகம். தமிழையும், பிற மொழியையும் கலந்து பேசுவதிலேதான் அவனுக்கு நிறைவு. தனித்தமிழில் பேசுபவனைக் கூட மேலும் கீழும் ஒரு மாதிரியாகப் பார்க்கின்ற

(14-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்)